விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே



சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 12 வெள்ளிக்கிழமை (29.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 314

## ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ ஜனாதிபதி செயலணியில் தமிழர்களையும் இணைக்க ஜனாதிபதி இணக்கம்

(கொழும்பு)

“ஒரே நாடு - ஒரே சட்டம்” எனும் அரச தலைவர் செயலணியில் தமிழ்ப் பிரதிநிதிகளை இணைக்க ஆளும்கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் பெருந்தோட்டத் துறைக்கான இணைப்புச் செயலாளரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவருமான செந்தில் தொண்டமான் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான இந்தச் செயலணியில் தமிழ்ப் பிரதிநிதிகள் யாரும் உள்ளடக்கப்படாமை தொடர்பில் பெருமளவில் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று ஆளும் ▶15

## தவறிவிழுந்த பெண் மரணம்

### வடமராட்சியில் சம்பவம்

(கரணவாய்)

வடமராட்சியில் குளியலறைக்குள் தவறி விழுந்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு செம்பியன்பற்று தெற்கு பகுதி ▶15

### யாழ்.மாவட்டத்தின்

## கரையோரங்களில் பலத்த காற்று வீசும்

### அனர்த்த முகாமைத்துவப் பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் கடற்கரையை அண்டிய பகுதிகளில் வசிப்போர் மிகவும் அவதானமாகச் செயற்படுமாறு யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

தற்போதுள்ள தாழமுக்கத்தின் காரணமாக ▶15

### அரசைக் காக்கவே போராடுகின்றோம்

# ராஜபக்ஷவை கவிழ்ப்பது எமது நோக்கம் அல்ல

### பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக அறிவிப்பு



(கொழும்பு)

ராஜபக்ஷ அரசாங்கத்தை கவிழ்ப்பது எமது நோக்கம் அல்ல. அரசாங்கத்தை காக்கவே போராடுகின்றோம் என அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## மறுஅறிவித்தல் வரை கடலுக்குச் செல்ல வேண்டாம்

### வளிமண்டலவியல் திணைக்களம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை ஊடாக புத்தளம் வரையிலான கடற்பரப்புக்களில் மறு அறிவித்தல் வரும் வரை பயணிப்பதை தவிர்க்குமாறு மீனவர்கள் மற்றும் கடற்படையினருக்கு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை ▶15



## நாட்டின் இறையாண்மையுடன் விளையாட இடமளிக்க முடியாது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

நாட்டின் இறையாண்மையை சல்லி காசுக்கு விற்பனை செய்ய இடமளிக்க போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் கடந்த காலத்தில் தேசாபிமானம், தேசப்பற்று, இறையாண்மை ▶15

## மின்னல் தாக்கியதில் 14 வயது மாணவன் பலி



### துணுக்காயில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் மின்னல் தாக்கியதில் 14 வயது மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளார். ▶15

## இலங்கையில் முதலாவது மணல் மேடு பாதை திறப்பு




(கொழும்பு)

இலங்கையின் முதலாவது மணல்மேடு பாதை திறக்கப்பட்டது.

கொழும்பு குன்றுகள் என பெயரிடப் ▶15

### இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு

## ராஜபக்ஷ அரசாங்கத்தின் குடும்ப ஆட்சியே காரணம்



### சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ராஜபக்ஷ அரசின் குடும்ப ஆட்சி காரணமாக இலங்கை குட்டிச்சுவராகி பொருளாதாரத்தில் தாழ்ந்து போயுள்ளது. இதுவே இன்று விவசாயிகளுக்கும் நடந்துள்ளது ▶15

### சீருடை விவகாரம் தொடர்பில்

## யாழ்.மாநகர சபை உறுப்பினர் பார்த்தீபனிடம் ரி.ஐ.டி விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை உறுப்பினர் பார்த்தீபனிடம் பயங்கரவாத விசாரணைப் பிரிவு 5 மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளது.

மாநகர கண்காணிப்பாளர்களின் சீருடை யாருடைய அனுமதியில் அறிமுகப்படுத்தப்பட்டது? யார் அறி ▶15

## கொரோனா 22 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்றினால் மேலும் 22 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ▶15

## பஸ், ரயில் சேவைகள் நவம்பர் முதல் வழமைக்கு

(கொழும்பு)

நவம்பர் முதலாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் பொதுப் போக்குவரத்து சேவைகளை வழமையான கால அட்டவணையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுக் காலை ஊடகங் ▶15

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# மரண அறிவித்தல்



## அன்னப்பிள்ளை காசிப்பிள்ளை

மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் கல்லூரி வீதி இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னப்பிள்ளை காசிப்பிள்ளை நேற்று (28.10.2021) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னப்பெடி - சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும் நாகம்மா (ராணி), ஈஸ்வரி (இராசாத்தி), ஜெயக்குமார் (இந்திரன் - கனடா), சிவகுமார் (சிவம் - நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுப்பிரமணியம், காலஞ்சென்ற முருகேசு, சித்திரா, திலகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தயானந்தன், கோபிநாத், அரவிந், சியாமி, விஜித், றாஜினி, கபிலன் (கபில்), தீபிகா, புவியா, டெவி, அருண், பகிரதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அஞ்சலி, ஆகாஜ், யதுஸ், அரியானா, ஜெயிற்ரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.10.2021) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் மட்டிவளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (C-2897)

கல்லூரி வீதி,
இளவாலை.

தகவல் :-
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி புவனேஸ்வரி தருமலிங்கம்

( வட்டுக்கோட்டை, அவுஸ்ரேலியா )

**தோற்றம் : 21.05.1929**
**மறைவு : 24.10.2021**

அன்னாரின் பிரிவால் துயருறும் இளைப்பாறிய கொமர்சல் வங்கி முகாமையாளர் **த. தேவராஜன்** மற்றும் சகோதரர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் நல் ஆத்மா இறைவன் திருவடியில் சாந்திபெற வட்டு. கண்ணகி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.
(அன்னாரின் கிரியைகள் யாவும் அவுஸ்ரேலியாவில் இன்று (29.10.2021) வெள்ளிக்கிழமை இடம்பெறும்.)
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீ முருகன் களஞ்சியம்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை. (C-2898)

சி. ஸ்ரீஜீவா சாரதா குடும்பத்தினர்
வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர்
077 385 8095

# இனவாத செயற்பாடுகளுக்கு அரசு அனுமதிப்பத்திரம் வழங்கியுள்ளது

## ஞானசார தேரர் நியமனம் தொடர்பில் ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஞானசார தேரரை செயலணிக்கு தலைவராக நியமித்ததன் மூலம் இலங்கையில் இனவாத செயற்பாட்டுக்கு கோட்டாபய அரசாங்கம், அனுமதிப்பத்திரத்தை வழங்கியுள்ளது என ஜேவிபியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பின்படி "ஒரேநாடு ஒரே சட்டம்" என்பது பொதுவான விடயமாகும். எனவே அதற்காக ஒருசெயலணியை உருவாக்கவேண்டியது இல்லை என்பதே ஜேவிபியின் நிலைப்பாடாகும். இலங்கையில் பல்வேறு நீதி முறைகள் உள்ளன. இந்த நிலையில் நாட்டில் நீதியை மீறிச் செயற்படும் பிரிவினரும் உள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கத் தரப்பினர், அரசாங்கத்துக்கு சார்பான அதிகாரிகள் நீதிக்கு புறம்பாகவே செயற்பட்டுவருகின்றனர். ஒருநாட்டின் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பது என்றால், அந்த பாராளுமன்றம் இறந்துவிட்டதாகவே கருதவேண்டும்.

இதனைதவிர, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு 20 ஆவது திருத்தத்தின் மூலம் மேலும் அதிகாரங்கள் கிடைத்துள்ளன.

மொத்தத்தில் அவரே இலங்கையின் நீதியாக செயற்படுகிறார். அரச தலைவர், படைகளின் தளபதி என்றுஅனைத்தையும் கட்டுப்படுத்துகிறார். நீதிபதிகளை நியமிப்பது, சட்டமா அதிபரை நியமிப்பது உட்பட அனைத்து விடயங்களையும் அவரே மேற்கொள்கிறார். இந்தநிலையில் இரண்டு வருடங்கள் கழித்து இந்த நீதிக்காக ஒருசெயலணியை அவர் உருவாக்க முனைந்தமையே அவரின் இயலாமையை காட்டுகிறது என்றார். (ம-03)

# மரண அறிவித்தல்

பிறப்பு
1941
10
31

இறப்பு
2021
10
28



## திருமதி இராஜேஸ்வரி சோமசேகரன்

(பதிவு பெற்ற வைத்திய அதிகாரி)

பேரம்பலம் அவெனியூ சங்குவேலி மானிப்பாயை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இராஜேஸ்வரி சோமசேகரன் அவர்கள் 28.10.2021 வியாழக்கிழமையன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் (ஆசிரியர்) - நாகரத்தினம் தம்பதியினரின் புதல்வியும் வேலணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தலைமை ஆசிரியர் வைரமுத்து (செல்லையா-வாத்தியார்) - மனோன்மணி அம்மா தம்பதியினரின் மூத்த மருமகளும் காலஞ்சென்றவரான வைரமுத்து சோமசேகரன் (ஓய்வுநிலை பிரதம எழுதுவினைஞர்) அவர்களின் அன்பு மனைவியும் வைதேகி (நோர்வே), மைக்ரோ பீசி சிஸ்டம் இயக்குனர்களான ககனாந்தா, குகனானந்தா ஆகியோரின் தாயாரும் பிரபாகரன் (நோர்வே), வினோதா, கார்த்திகா ஆகியோரின் மாமியாரும் கருணிகா (நோர்வே), தனிஷ்கா, யாதுரா, பிரதன் ஆகியோரின் பேர்த்தியாரும் பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான யுகவதி, மகேஸ்வரி மற்றும் பரஞ்சோதிநாதன், மங்கையற்கரசி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சண்முகரட்ணம் மற்றும் பொன்மயிலாம்பிகை, காலஞ்சென்ற பூரணானந்தம்பிள்ளை மற்றும் திருநிலைநாயகி (கனடா), செல்வேந்திரன் (கனடா), விஜயேந்திரன் (லண்டன்) மற்றும் காலஞ்சென்ற பாலேந்திரன் மற்றும் கலாமணி, காலஞ்சென்றவர்களான சண்முகரட்ணம், பாலேந்திரன் மற்றும் அமிர்தலிங்கம், உமாதேவி, விஜயசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும் பஜனேஸ்வரி (பிரான்ஸ்), மகாலிங்கம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் காந்தமூர்த்தி (கனடா), காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் மதிவதனி (லண்டன்), பிரியதர்ஷினி (பிரான்ஸ்), லோகநாதன் (KMT) ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதன்பின் 31.10.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு காலை 10.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
இல.115/8, டபிள்யூ ஏ சில்வா மாவத்தை, வெள்ளவத்தை (C-2899)

# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் வவுனியாவில் தீப்பிடிப்பு

(வவுனியா)

வவுனியா கூமாங்குளம் பகுதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் தீப்பிடித்து எரிந்துள்ளன.

நேற்றையதினம் (28) வீட்டில் யாருமில்லாத நிலையில் குறித்த மோட்டார் சைக்கிள்கள் தீப்பிடித்து எரிந்துள்ளன.

இதனை அவதானித்த அயலவர்கள் வீட்டின் உரிமையாளருக்கு இது தொடர்பாக தகவல் தெரிவித்திருந்தனர். அதன் பின்னர் தீ கட்டுபாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

குறித்த 'சம்பவத்தில்' ஒருவருக்கு சொந்தமான இரு மோட்டார் சைக்கிள்களும் ப்குதியளவில் எரிந்துள்ளன.

சம்பவம் தொடர்பாக மோட்டார் சைக்கிள் உரிமையாளரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-03,299)

# வருட இறுதியில் மீண்டும் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிக்கும்

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**டிசெம்பர் மாதமளவில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஆபத்து நிலவுவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

தனிமைப்படுத்தல் சட்டம் நீக்கப்பட்டதை அடுத்து மக்கள் சுகாதார நடைமுறைகளை மீறி செயற்பட்டு வருவதாக குறித்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

மக்கள் சகாதார நடைமுறைகளை மீறி சுற்றுலாவுக்கு செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருப்பதாகவும் இதனால் எதிர்வரும் இரு வாரங்களில் மேலும் கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# உலக சுகாதார ஸ்தாபனத்தின் உறுப்பினராக பேரா.நீலிகா



(கொழும்பு)

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொவிட்-19 தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நீலிகா மளவிகே நியமிக்கப்பட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான பரிசோதனையை முன்னெடுக்கும் 10 பேர் கொண்ட குழுவில் அவர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இந்தக் குழு இரண்டு வருடங்களுக்கு தமது செயற்பாடுகளை முன்னெடுக்கும் என் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முல்லைத்தீவில் நேற்று போராட்டம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று கவனீயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டமானது நேற்று 1696 ஆவது நாளாகவும் இடம்பெற்றது. இப்போராட்டம் முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் அலுவலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

யுத்தம் முடிவுக்கு வந்து பல ஆண்டுகளாகியும் இன்று வரை எந்த தீர்வுகளும் தமக்கு கிடைக்கவில்லை என்றும் சர்வதேச சமூகமே தமக்கான தீர்வினைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் தமது பிள்ளைகளை தேடித் தேடி பெற்றோர்கள் பலர் உயிரிழந்து வருகின்றனர். இந்நிலையில் தமக்கு விரைவில் தீர்வைப் பெற்றுத் தர சர்வதேச சமூகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-281)

# போராட்டத்தைக் கைவிட்டு விவசாயத்தில் ஈடுபடுங்கள்

## மகிந்தானந்த விவசாயிகளுக்கு அழைப்பு

(கொழும்பு)

நனோ-நைட்ரஜன் திரவ உரத்தை பயன்படுத்தி குறைவான விளைச்சலை பெறும் விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கும் சுற்றறிக்கை எதிர்வரும் வாரம் வெளியிடப்படும்.

பெரும்போக விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான உரம் விவசாயிகளுக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளன.

ஆகவே விவசாயிகள் போராட்டத்தை கைவிட்டு விவசாய நடவடிக்கைகளில் ஈடுப்பட வேண்டும் என விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஜனாதிப்தி ஊடகப்பிரிவு மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற இணையவழி முறைமை ஊடாக ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (நி)

# கல்வி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுங்கள்

## குழந்தைநல மருத்துவர் தீபால் கோரிக்கை



(கொழும்பு)

பாடசாலைச் சூழல் பாதுகாப்பானது. பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதால், நேர்மறை வழக்குகள் அதிகரிக்கக்கூடும் என்றும் டெல்டா மாறுபாடும் சமூகத்தில் பதிவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் தொற்று பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிலையில், அதிக மக்கள் நடமாட்டம் உள்ள பொது இடங்களுக்கு குழந்தைகளை அழைத்துவர வேண்டாம் என்றும் அவர்களை தனிப்பட்ட சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்ல வேண்டாம் எனத் தெரிவித்ததுடன் கடந்த 6 மாதங்களாக பாடசாலைகளில் கல்வி கற்க முடியாத நிலையில் பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்துமாறும் பெற்றோர்களை அவர் கேட்டுக் கொண்டார். (நி)

# பக்கவாத நோயினால் வருடாந்தம் 20 ஆயிரம் பேர் ஊனமுற்றோராக மாறுகின்றனர்

## தேசிய பக்கவாத நோய் தொடர்பான சங்கம் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

பக்கவாத நோய் காரணமாக வருடாந்தம் சுமார் 20 ஆயிரம் பேர் ஊனமுற்றோராக மாறுவதாக தேசிய பக்கவாத நோய் தொடர்பான சங்கம் தெரிவித்தது.

பக்கவாத நோய் அறிகுறிகளுடன் கூடிய நபர்களை உடனடியாக வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிப்பதன் மூலம் அவர்கள் ஊனமுற்ற நிலைமைக்குச் செல்வதைத் தவிர்க்க முடியும் என அந்த சங்கத்தின் தலைவரான நரம்பியல் நோய்கள் தொடர்பான நிபுணர் மருத்துவர் ஹர்ச குணசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் வருடாந்தம் பக்கவாதம் காரணமாக சுமார் 60 ஆயிரம் நோயாளிகள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.

இவர்களில் சுமார் 4 ஆயிரம் நோயாளர்கள் மரணமடைகின்றனர்.

இதனைத் தவிர சுமார் 20 ஆயிரம் நோயாளிகள் ஊனமுற்றோராக மாறுகின்றனர்.

இந்த நிலைமையைக் குறைக்கப் பக்கவாத நோய் அறிகுறிகளை உடனடியாக அறிந்து கொள்ளுமாறு மக்களிடம் கோருகிறோம்.

நோய் அறிகுறிகளை நாங்கள் தெளிவுபடுத்துகிறோம். முகத்தில் ஏற்படும் ஊனம், குறிப்பாக வாய் கோணலாக மாறுவது. கைகளை உயர்த்த முடியாமல் போவது, வார்த்தைகளை உச்சரிக்கும் போது ஏற்படும் பலவீனம் போன்ற நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அந்த நபரை அருகில் உள்ள வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுங்கள்.

குறிப்பாக சீ.டி.சீ. ஸ்கான் இயந்திரம் இருக்கும் வைத்தியசாலைக்கே நோயாளியை அழைத்துச் செல்ல வேண்டும் எனவும் மருத்துவர் குறிப்பிட்டார்.

பக்கவாத நோய்க்கான உணவுமுறை குறித்து தொற்றா நோய்கள் பிரிவின் மருத்துவ நிபுணர் சாந்தி குணவர்த்தன தெரிவிக்கையில்,

உப்பு, எண்ணெய், சீனி போன்றவற்றை அதிகமாக உணவுக்கு எடுப்பது. குறைவான உடற்பயிற்சி, மதுபானம் அல்லது போதைப் பொருள் பாவனை, புகைத்தலுடன் காற்று மாசடைதல் என்பன பக்கவாத நோய்க்கான காரணமாகும்.

நாங்கள் உப்பை அதிகமாகப் பயன்படுத்துகிறோம், இதனால், உயர் இரத்த அழுத்தம் ஏற்படக் கூடும். மாரடைப்பு, பக்கவாதம், சிறுநீரகக் கோளாறு இவை அனைத்துக்கும் அடிப்படைக் காரணம் உணவுப் பழக்க வழக்கமாகும்.

இலங்கையில் ஏற்படும் மரணங்களில் 83 வீதமான மரணங்கள் தொற்று நோய் அல்லாத நோய்கள் காரணமாக ஏற்படுகின்றன எனவும் சாந்தி குணவர்தன குறிப்பிட்டார். (நி)

# இங்கிலாந்திடம் வீழ்ந்தது வங்கம்

இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின் 20ஆவது லீக் போட்டியில், இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

அபுதாபியில் நேற்று முன்தினம் குழு 1 இல் நடைபெற்ற இப்போட்டியில், இங்கிலாந்து அணியும் பங்களாதேஷ் அணியும் பலப் பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.



துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பில் முஷ்பிகுர் ரஹீம் 29 ஓட்டங்களையும் மொஹமதுல்லா மற்றும் நசும் அஹமட் ஆகியோர் தலா 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், டைமல் மில்ஸ் 3 விக்கெட்டுக்களையும் மொயின் அலி மற்றும் லிவிங்ஸ்டன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கிறிஸ் வோக்ஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

123 என்ற வெற்றி இலக்கை கொண்டு பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணி, 14.1 ஓவர்களில், 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை 8 விக்கெட்டுக்களால் அடைந்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜேஸன் ரோய் 61 ஓட்டங்களையும் டேவிட் மலான் ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், சொறிபுல் இஸ்லாம் மற்றும் நசும் அஹமட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 38 பந்துகளில் 3 சிக்ஸர்கள் 5 பவுண்ரிகள் அடங்கலாக 61 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட ஜேசன் ரோய் தெரிவு செய்யப்பட்டார். (4-6)


## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## 2022ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

**சாவகச்சேரி நகராட்சி மன்ற அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் பொதுச்சந்தை, கருவாட்டுக் கடை, இறைச்சிக் கடைகளை 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றது.**

1. கேள்விப் பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி நகராட்சி மன்ற அலுவலகத்தில் 29.10.2021 - 19.11.2021ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப 9.30 - பி.ப 2.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை பெறுபவர் தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராம சேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் கொண்டுவருதல் வேண்டும்.

   கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி :- **19.11.2021ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 02.30 மணி**

   கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- **22.11.2021ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணி**

2. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். 22.11.2021 முற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இதன் இணைப்பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக பட்டியலிடப்பட்டவர்களுக்கு கேள்விப் படிவம் வழங்கப்படமாட்டாது என்பதுடன் படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் கேள்விப் பத்திரம் நிராகரிக்கப்படும்.

5. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

6. கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

7. தெரிவுசெய்யப்படும் கேள்விகாரர் தாங்கள் தெரிவுசெய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத் திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.

8. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**2022ஆம் ஆண்டு பொதுச்சந்தை, இறைச்சிக் கடைகள் கருவாட்டுக் கடைக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகை விபரம் (01.01.2022 – 31.12.2022) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதரவரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதரவரிகள் தவிர) (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | சாவகச்சேரி பொதுச் சந்தை (மரக்கறிச்சந்தை, மீன்சந்தை, வாகனத் தரிப்பிடம் உள்ளடங்கலாக) | 9,912,101.10 | | 1,000.00 |
| 02 | கருவாட்டுக் கடை இல : 01 | 106,700.00 | 1,100.00 | 1,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக் கடை இல : 01 | 364,210.00 | 3,650.00 | 1,000.00 |
| 04 | மாட்டிறைச்சிக் கடை இல : 01 | 1,715,950.50 | 17,200.00 | 1,000.00 |
| 05 | மாட்டிறைச்சிக் கடை இல : 02 | 1,715,950.50 | 17,200.00 | 1,000.00 |
| 06 | கோழி இறைச்சிக் கடை இல : 01 | 1,507,000.00 | 15,100.00 | 1,000.00 |
| 07 | கோழி இறைச்சிக் கடை இல : 02 | 1,507,000.00 | 15,100.00 | 1,000.00 |

**குறிப்பு:** இந்நகராட்சி மன்றத்தின் பொதுச் சந்தை, இறைச்சிக்கடை, கருவாட்டுக் கடையிலிருந்து 1/2 Km சுற்றுவட்டத்திற்குள் தனியார் எவரும் மரக்கறி, இறைச்சி, கருவாடு என்பன விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நகராட்சி மன்றம்
**திருமதி சிவமங்கை இராமநாதன்,**
சாவகச்சேரி தவிசாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

(C-2896) 29.10.2021


# நமீபியாவிடம் சரணடைந்தது ஸ்கொட்லாந்து



இருபது - 20 உலகக் கிண்ண தொடரின் 21 ஆவது லீக் போட்டியில், ஸ்கொட்லாந்தை வீழ்த்தி நமீபியா அணி மகத்தான வெற்றியை பதிவு செய்துள்ளது.

அபுதாபியில் நேற்று முன்தினம் குழு 2 இல் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நமீபியா அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 109 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் லீஸ்க் 44 ஓட்டங்களையும் கிறிஸ் க்ரேவ்ஸ் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் நமீபியா அணி சார்பில் ரூபன் ட்ரம்பெல்மேன் 3 விக்கெட்டுக்களையும் ஜென் பிரைலிங்க் 2 விக்கெட்டுகளையும் ஸ்மிட் மற்றும் வைஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 110 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நமீபியா அணி, 19.1 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை 4 விக்கெட்டுக்களால் அடைந்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஸ்மிட் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும் கிரைஜ் வில்லியம்ஸ் 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். (4-6)

# இராசிபலன்

**29.10.2021**
**ஜப்பசி 12, வெள்ளிக்கிழமை**
**அட்டமி முற்பகல் 10.16 மணிவரை**
**பூசம் முற்பகல் 8.42 மணிவரை**
**சுபநேரம் 6.03-7.33 மணிவரை**
**இராகுகாலம் 10.33-12.03 மணிவரை**
**சந்திராஷ்டமம்: உத்தராடம்**

**வளவன்**


மேஷம்

தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.


ரிஷபம்

சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண வேண்டிய நாள்.


மிதுனம்

கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.


கடகம்

விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


சிம்மம்

பயணங்களின் போது விழிப்புணர்வு அவ சியம், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.


கன்னி

குடும்பத்தில் கலகலப்பான சுழ்நிலை உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


துலாம்

வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.


விருச்சிகம்

வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கை கூடும், பூர்விகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்கள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


தனுசு

எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்வது நல்லது, கேட்ட இடத்தில் உதவி கிடைப்பது அரிது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மகரம்

பெரிய மனிதர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும், பொருளாதார நிலையில் முன்மேற்றம் காணபீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.


கும்பம்

கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், தெய்வீக சிந்தனை மேலோ ங்கும் நாள், கடன் சுமை குறைய புதிய வழிகளைக் கையாள்வீர்கள், போசன சுகமுண்டு.


மீனம்

நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியம் இன்று கைகூடும், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தாழ்ந்த சுபாவ முண்டு.

**நல்ல செயலில் துணிவுடையவர் நாள் தோறும் வெற்றியை காண்பர்**

# மேய்ச்சல் தரவைகள் இன்மை கால்நடை வளர்ப்பாளர்கள் பாதிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைபற்று பிரதேச செயலாளர் பிரிவின் குமுழமுனை கிராம கால்நடை வளர்ப்பாளர்கள் மேய்ச்சல் தரவை நிலங்கள் இல்லாததன் காரணமாக தமது கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் என்பவற்றில் நடைபெறும் கூட்டங்களில் குமுழமுனை கிராமத்திற்கான மேய்ச்சல் தரவைகளை அடையாளப்படுத்துங்கள் என தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றனர்.

வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ள காணிகள் விடுவிக்கப்படும் போது மேய்ச்சல் தரவைகளுக்கான நிலங்கள் ஒதுக்கப்படும் என அதிகாரிகள் அளித்த வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இல்லாததன் காரணமாக அடிக்கடி கால்நடைகள் பயிர்ச் செய்கை நிலங்களுக்குள் புகுந்து அழிவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (4-5-350)

# சட்டவிரோத மணல் அகழ்வைத்தடுக்க இராணுவ காவலரண் அமையுங்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று அம்பலவன் பொக்கணை கிராம உத்தியோகத்தர் பிரிவில் தொடர்கின்ற மணல் அகழ்வினைத் தடுப்பதற்கு இராணுவக் காவலரண் உருவாக்கப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் தொடர்கின்ற மணல் அகழ்வினைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

மணல் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. தொடர்கின்ற சட்டவிரோத மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு மாத்தளன் சந்தியில் காவலரண் உருவாக்குவதன் மூலம் மணல் அகழ்வினைத் தடுக்க முடியும்.

இதற்கான ஏற்பாடுகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். .(4-5-350)


# கண்ணீர் அஞ்சலி

அமரர்.திருமதி. **கணபதிப்பிள்ளை பவளம்**

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி.
**தவலோஜினி ஜெயசீலன் அவர்களின் மாமியார்**
திருமதி.
**கணபதிப்பிள்ளை பவளம்**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்கிறோம்.

(C-2894)

**யா/ கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க. பாடசாலை**

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## மனவளக்கலை யோகப் பயிற்சிகள் மீண்டும் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் முழுமைநல வாழ்விற்கான எளியமுறை குண்டலினி யோகப் பயிற்சிகளாகிய

- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கு : எளியமுறை உடற் பயிற்சிகள்
- மன அழுத்தம் குறைய : எளியமுறை தியானப் பயிற்சிகள்
- உயிர்ச்சக்தியை அதிகரிப்பதற்கு : காயகல்பப் பயிற்சிகள்

போன்றவற்றை அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆரம்பிக்க இருக்கின்றன. எனவே அனைவரும் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம்: 30.10.2021 (சனிக்கிழமை)**
**நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரைக்கும்**
**பயிற்சிகளை வழங்குபவர் : துணைப் பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் அவர்கள்**

குறிப்பு: பயிற்சியானது கொவிட்-19 சமூக பாதுகாப்பு விதிகளுக்கமைவாக நடைபெறும்.

**தொடர்புகளிற்கு : யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
**தொ.இல.021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309**

(C-2895)

# உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் மீளாய்வுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப்பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதியுதவியின் கீழ் நடைபெற்ற வீடமைப்பு மற்றும் உட்கட்டுமான அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தலைமையில் கடந்த 26 ஆம் திகதி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நடைபெற்றுவரும் வேலைகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மேலும், குறித்த அமைச்சின் நிதிஒதுக்கீட்டில் யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெறும் வேலைத் திட்டங்கள் நேரடியாக களவிஜயம் மேற்கொண்டு பார்வையிட்டதுடன், இது தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சின் மேலதிக செயலாளர் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெற்றுவரும் வேலைகளின் பௌதீக மற்றும் நிதி நிலைமைகள் முன்னிலையில் உள்ளதாகவும் தெரிவித்தார். (5-4-33)



யாழ். பல்கலை மாணவி பாவலர் செல்வி ஆர்த்திகா சுவேந்திரனின் முதலாவது கவிதை நூலான “மல்லிகை மொழிக் கவிதைகள்” எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் திருமண மண்டபத்தில் கடந்த 22ஆம் திகதி நடைபெற்றது.

# இருதய சிகிச்சை நிலைய செயற்பாடுகள் ஆரம்பம்



(குப்பிழான்)

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இருதய சிகிச்சை நிலையப் பிரிவின் செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இருதய சிகிச்சை நிபுணர் டாக்டர். எம். குருபரனின் வருகையுடன் ஆரம்பமான இருதய சிகிச்சை நிலையத்தின் செயற்பாடுகள் மாதாந்தம் யாழ். போதனா வைத்தியசாலை இருதய சிகிச்சை நிபுணர்களின் வருகையுடன் நடை பெறும் என மேற்படி வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. (4-5-18)

## நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/ மகாஜனக் கல்லூரியின் மகாஜன சிற்பி தெ.து. ஜயரத்தினம் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் கல்லூரி அதிபர் ம.மணிசேகரன் தலைமையில் இன்று மாலை 3.30 மணிக்கு நிகழ்நிலை ஊடாக நடை பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக மகாஜன சிற்பியின் மகள் திருமதி ஜெயபவானி விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக கனடா பழைய மாணவர் சங்கத் தலைவர் (முன்னாள் ஆசிரியர்) கனகசுந்தரம் புவனச்சந்திராவும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் நினைவுப் பேருரையை பொறியியலாளர் சச்சிதானந்தம் கோபிநாத்தும் ஆசியுரையினை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திரு முருகனும் வழங்குவர். இந் நிகழ்வில் கலந்து கொள்வதற்கான zoom webinar ID8296 7749996 ஆகும். (4-5-105)

# கிளைமத்தோன் நிகழ்வு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

காலநிலை மாற்றம் தொடர்பில் இளையோர் ஒன்றிணையும் கிளைமத்தோன் 2021 இற்கான சர்வதேச நிகழ்வு யாழ்ப்பாண நகரத்தில் மூன்றாவது வருடமாக இன்று 29ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்களுக்கு இடம் பெறும்.

இணையவழியூடாகவே இந் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனை தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

காலநிலை நெருக்கடியை எதிர்கொள்ள 150 இற்கும் மேற்பட்ட பெரு நகரங்களில் இளையோர்கள் ஒரே காலப்பகுதியில் ஒன்றிணையும் நிகழ்வான கிளைமத்தோன் இடம்பெற்று வருகின்றது.

இந் நிகழ்வு தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளதுடன் இணையவழி நிகழ்வில் பல்வேறு அறிஞர்களும், பேராசிரியர்களும் சிறப்புரையாற்றவுள்ளனர்.

மேலதிக விபரங்களை அறியவும் இணைந்து செயற்படவும் Climathonjaffna@gmail.com உடன் தொடர்புகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (4-5-33)

# மோட்டார்குண்டு மீட்பு



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

கெற்பேலி கடற்கரைப் பகுதியில் காணப்பட்ட மோட்டார் குண்டு ஒன்றே இவ்வாறு கொடிகாமப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. (4-5-30)

# தென்மராட்சி வலய மாணவர்களுக்கு முதற்கட்டமாக 5 ஆயிரம் டோஸ் பைசர்

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் 30 வயதுக்கு மேற்பட்ட 70 வீதமானோர் கொரோனாத் தடுப்பூசியை இதுவரை பெற்றுக் கொண்டுள்ளனர் என சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் தென்மராட்சிப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கென முதற்கட்டமாக 5000டோஸ் பைசர் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் இதுவரை தென்மராட்சியில் 864 மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசியின் முதல் டோஸ் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது 2001-10-22 தொடக்கம் 2005-10-21 இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்தவர்களுக்கு பைசர் தடுப்பூசி வழங்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் 16 வயதுக்கும்- 19வயதுக்கும் இடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி செலுத்தப்பட்டு வரும் நிலையில் பாடசாலையை விட்டு விலகிய குறித்த வயதுப் பிரிவினரும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பதிவு செய்து தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் மேலும் தெரிவித்துள்ளனர். (4-5-30)

# மதுபோதையில் சாரத்தியம்; 25 ஆயிரம் ரூபாய் அபராதம்

(அராலி)

இளவாலை பகுதியில் மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபர் ஒருவர் கடந்த 25ஆம் திகதி இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்ப ட்டார்.

கைது செய்யப்பட்டவர் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் முன்னிறுத்தப்பட்டார். இந்நிலையில் மல்லாகம் நீதிமன்ற நீதவான் அவருக்கு, 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தார். (4-5-104)




## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.15 மணிக்கு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இடம்பெறும். இந்நிலையில் சிவநெறிச் செம்மல் சைவப்புலவர் கா.கமலநாதன் "கந்தசஷ்டி விரத மகிமை" எனும் த்லைப்பில் சொற்பொழிவாற்றுவார். (4-5)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு வட்டுக் கோட்டை துறட்டிப் பனை அருள்மிகு முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ ச.மதுசூதனக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு செய்யப்படும். (4-5)

# கொரோனாவின் அடுத்த அலையைக் கட்டுப்படுத்த மூன்றாவது தடுப்பூசியை விரைந்து வழங்குங்கள்

## இலங்கை மருத்துவ சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

**இலங்கையில் கொரோனா வைரஸின் மற்றொரு அலையைத் தடுக்க அவசரமாக கொரோனா தடுப்பூசியின் 3 ஆவது டோஸ் வழங்கப்பட வேண்டும் என இலங்கை மருத்துவ சங்கம் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.**

60-வயதுக்கும் மேற்பட்டவர்கள் மற்றும் 60வயதுக்குக் குறைந்த நோயெதிர்ப்பு சக்தி குறைபாடு உடையவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அமெரிக்கா - ஜேர்மனி கூட்டுத் தயாரிப்பான பைசர் 3 ஆவது டோஸ் விரைவில் வழங்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில், இலங்கை மருத்துவ சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் சீனாவின் சினோபார்ம் தடுப்பூசியைப் பெற்ற முதியவர்களில் 7வீதம் பேர் கொவிட்-19 க்கு எதிராக போதுமான அளவிலான நோய் எதிர்ப்பு சக்தியை கொண்டிருக்கவில்லை என்பது நிறுவப்பட்டுள்ளது.

அத்துடன், ஒக்ஸ்போர்டு-அஸ்ட்ராஜெனெகாவின் இந்தியத் தயாரிப்பான கோவிஷீல்டு தடுப்பூசியின் இரண்டாவது டோஸை சுகாதார துறைசார்ந்தோர் பெற்றுக்கொண்டு 6 மாதங்கள் ஆகின்றன. எனவே அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தி குறையத் தொடங்கும். இதனால் அவர்கள் கொவிட் தொற்றுக்கு ஆளாகும் அபாயம் அதிகம்.

இந்நிலையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், நோயெதிர்ப்பு குறைபாடுள்ள நிலையில் உள்ள 60 வயதுக்குட்பட்ட நோயாளிகள் மற்றும் அனைத்து சுகாதாரத்துறையினருக்கும் தாமதமின்றி பைசர்-பயோஎன்டெக் தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் அல்லது பூஸ்டர் வழங்கப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் மற்றொரு தொற்று அலையைத் தடுப்பதற்கான முன்னுரிமை நடவடிக்கைகளில் ஒன்றாக இது கருதப்பட வேண்டும் எனவும் மருத்துவ சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தற்போது அமுலில் உள்ள சுகாதார வழிகாட்டல்கள் மிகவும் தளர்வானவை. மற்றொரு அலையைத் தடுக்க கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட வேண்டும்.

நாட்டில் அமுலில் உள்ள சுகாதார வழிகாட்டுதல்கள் பொதுமக்களால் பரவலாக மீறப்படுகின்றன. பலர் முகக் கவசங்களை அணிவதைத் தவிர்க்கின்றனர். மேலும் கடைகள், சந்தைகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் இறுதிச் சடங்குகள் போன்ற பொது இடங்களில் சமூக இடைவெளி பேணப்படுவதில்லை.

அத்துடன், திருமண நிகழ்வுகள், சமய நிகழ்வுகள், இறுதிச் சடங்குகள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் உள்ளரங்குகளில் இடம்பெறும் களியாட்ட நிகழ்வுகளுக்கான கட்டுப்பாடுகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று பரிசோதனைகளை அதிகரிக்குமாறும் அனைத்து மருத்துவமனைகளின் வெளி நோயாளர் பிரிவுகளிலும் சுவாசத்தொற்று நோய் கண்காணிப்பு நடைமுறைகளை வலுப்படுத்துமாறும் சுகாதார அமைச்சை வலியுறுத்துவதாகவும் ஜனாதிபதிக்கு எழுத்துமூலமாக இலங்கை மருத்துவ சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (நி)

# உலகின் சிறந்த விஞ்ஞானிகளுள் 24 இலங்கையர்கள் உள்ளடக்கம்

(கொழும்பு)

எமது நாட்டின் நிபுணர்கள் அங்கம் வகிக்கும் தேசிய தாவர தடுப்பு காப்பு சேவை சீனாவின் உர கொடுக்கல்-வாங்கல் மூலம் சவாலுக்கு உட்படுத்தப்படுகின்ற நிலையில், உலகின் முன்னணி பல்கலைக்கழகமொன்று விடுத்த புதிய அறிக்கையொன்றில் எமது நாட்டு நிபுணர்களின் சிறப்பு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்கா வின் ஸ்டென்ஃபோர்ட் பல்கலைக்கழகம் விடுத்த இந்த அறிக்கைக்கமைய, உலகின் முக்கியமான ஆய்வுகளை மேற்கொள்ளும் 2 வீத விஞ்ஞானிகளில் இலங்கையைச் சேர்ந்த 24 பேர் அடங்குகின்றனர்.

இவர்களில் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் நீலிகா மலவிகே, பேராசிரியர் மெத்திகா வித்தானகே, கலா நிதி அனுஷ்கா யூ ராஜபக்ஷ ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

இதனைத் தவிர சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம், யாழ்ப்பாணம், பேராதனை, கொழும்பு, களனி, வயம்ப பல்கலைக்கழகங்களின் விஞ்ஞானிகளின் பெயர்களும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. (நி)

# இனப்படுகொலைக்கு நீதிகோரி கனடாவில் மாபெரும் பேரணி

(ரொரன்டோ)

தமிழினப் படுகொலை விசாரணையை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையம் இனியும் தாமதிக்காது முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தி கனேடியத் தமிழர்கள் மாபெரும் வாகனப் பேரணியை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

எதிர்வரும்நவம்பர் மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ரொரன்டோவில் இந்தப் பேரணி இடம்பெறவுள்ளது.

கனேடிய தமிழர் தேசிய அவை, கனேடியத் தமிழர் சமூகம், மாணவர் சமூகமும் இணைந்து பேரணி ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளன. (நி)

# கைகள் இல்லாத குறையை கால்களால் நிவர்த்தி செய்யும் சிறுவன்



(கொழும்பு)

பிறப்பில் இரண்டு கைகளும் அற்ற நிலையில் இறைவன் கொடுத்த இரு கால்களினால் தனது அனைத்து கடமைகளை பூர்த்தி செய்து வருகிறார் சிறுவன் ஒருவன்.

ஹங்குரான்கெத்த பிரதேச செயலர் பிரிவில் லூக்வூட் தோட்டத்தில் வசிக்கும் இச்சிறுவனின் தந்தை தலைநகரத்தில்கூலி தொழில் செய்து வரும் நிலையில் தாயார் தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறிப்பில் ஈடுபட்டு வருகிறார். சஞ்சீவன் லூக்வூட் தமிழ் வித்தியாலயத்தில் தரம் மூன்றில் கல்வி பயின்று வரும் ஒரு திறமைசாலி மாணவன். தனது இரு கால்களினால் மூன்று மொழிகளிலும் எழுதுவதிலும் சித்திரம் வரைவதிலும் திறமையானவனாகக் காணப்படும் இச்சிறுவன் ஏனைய பல செயற்பாடுகளையும் அவனது கால்கள் மூலம் செய்வதனால் அவனது திறமையினைக் கண்டு அக்கிராம மக்கள் வியப்பில் ஆழ்ந்துள்ளனர். (நி-5)

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு-விவசாயத்துறை அமைச்சு

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டு சிறுபோக விவசாயத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விவசாயம் மற்றும் கமநல காப்புறுதி சபை 37 கோடி ரூபாய் நட்ட ஈடு வழங்கியுள்ளது.

நாடு தழுவிய ரீதியில் உள்ள 21 ஆயிரத்து 956 விவசாயிகளுக்கு இவ்வாறு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

நெல், சோளம், பெரிய வெங்காயம், மிளகாய், சோயா மற்றும் உருளைக் கிழங்கு ஆகிய பயிர்ச்செய்கைகளுக்கு இயற்கையான முறையில் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் வெள்ளப் பெருக்கு, யானை தாக்குதல் ஆகிய காரணிகளைக் கருத்திற் கொண்டு எவ்வித காப்புறுதி அறவீடு களுமில்லாத வகையில் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

நட்டஈடு வழங்கும் முறைமையில் பயிர்ச் செய்கைக்கு ஏற்படும் நோய்த்தாக்கங்கள் மற்றும் தீப்பரவல் ஆகிய அனர்த்தங்களுக்கு உள்ளான ஒரு ஏக்கர் காணிக்கு 200 ரூபாய் வீதம் செலுத்தி 40 ஆயிரம் ரூபாய் காப்புறுதியை பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் யானை, பன்றி, மான், முயல், எலி, மயில் மற்றும் குரங்கு ஆகிய உயிரினங்களினால் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்காக ஒரு ஏக்கர் காணிக்கு 400 ரூபாய் செலுத்தி 40 ஆயிரம் ரூபாய் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என விவசாயத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-5)

# வடகொரியாவில் தலைவிரித்தாடும் பஞ்சம்

# 2025 வரை குறைவாக உணவு உண்ணுமாறு மக்களுக்கு கிம் அதிரடி உத்தரவு

**(பியாங்யாங்)**

**2025 ஆம் ஆண்டு வரை நாட்டு மக்கள் குறைவாக உணவு உண்ணும் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் உத்தரவிட்டுள்ளார்.**



வட கொரியாவில் கடுமையான உணவுப் பஞ்சம் நிலவுகிறது. கொரோனா அச்சுறுத்தலால் வட கொரியா தனது நாட்டுடனான வெளிநாட்டு எல்லைகளுக்கு சீல் வைத்துள்ளது. குறிப்பாக உணவுப் பொருட்கள், எரிபொருள் என மிகவும் அத்தியாவசியத் தேவைகளுக்காக சார்ந்திருந்த சீன எல்லையையும் கூட மூடியுள்ளது.

இதனால் அங்கு ஒரு கிலோ வாழைப்பழத்தின் விலை 45 டொலர், 32 யூரோவாக இருக்கிறது. வட கொரிய மக்கள் மிகக் கடுமையான உணவுப் பஞ்சத்தில் தவித்து வருகின்றனர். இந்நிலை யில் 2025 ஆம் ஆண்டு வரை நாட்டு மக்கள் குறைவாக உணவு உண்ணும் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் உத்தரவு மக்களை மேலும் வதைப்பது போல் உள்ளதாக உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

வட கொரிய மக்களும் தற்போது நிலவும் உணவுப் பஞ்சம், வரும் குளிர் காலத்தைக்கூட கடக்க முடியாத அளவுக்குக் கடுமையாக இருக்கிறது. இதில், 2025 வரை குறைவாக உணவு உண்ண உத்தரவிட்டால் எப்படி எனத் தவிப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

வடகொரியா தனது உள்நாட்டு விடயங்கள் அனைத்தையுமே இராணுவ இரகசியம் போல் பாதுகாக்கும். அங்கு என்ன நடக்கிறது என்ற உண்மை நிலையை உலக நாடுகள் அவ்வளவு எளிதில் அறிந்துகொள்ள முடியாது. ஊடகங்களும் அரசுக் கட்டுப்பாட்டில் தான் இயங்குகின்றன.

கொரோனா பெருந்தொற்று உலகையே ஆட்டிப்படைக்கும் போதும் கூட அங்குள்ள தொற்று நிலவரம் குறித்து உண்மையான விபரம் உலகுக்குத் தெரியவில்லை.

வடகொரியாவில் பொருளாதாரம் ஏற்கனவே ஆட்டம் கண்டுள்ளது. அணு ஆயுதப் பரிசோதனைகள் அந்நாட்டுக்கு அமெரிக்கா உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடையை விதித்துள்ளன. இந்நிலையில் தற்போது அங்கு உணவுப் பஞ்சமும் ஏற்பட்டிருக்கிறது.

1990களில் சோவியத் யூனியன் சுக்கு நூறாக நொறுங்கியது. அதுவரையில் சோவியத் யூனியனை இறக்குமதி பொருட்களுக்காக பெருமளவில் நம்பியிருந்த வடகொரியா பெரும் பஞ்சத்தை சந்தித்தது. அந்தப் பஞ்சத்தின் போது இலட்சக்கணக்கான வடகொரியர்கள் உயிரிழந்தனர். இப்போது அப்படியொரு சவாலை மீண்டும் வடகொரியா எதிர்கொண்டுள்ளது என சர்வதேச நிபுணர்கள் கணிப்பு வெளியிட்டுள்ளனர். (நி)

# உள்நாட்டு போரைத் தடுக்கவே ஆட்சியைக் கைப்பற்றினோம்

## சூடான் இராணுவம் தெரிவிப்பு



(கார்டூம்)

உள்நாட்டுப் போரை தடுக்க இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியதாக சூடானின் ஆட்சிக்கவிழ்ப்புத் தலைவர் ஜெனரல் அப்தெல் ஃபத்தா அல்-புர்ஹான் அறிவித்துள்ளார்.

பாதுகாப்பிற்காக தளபதியின் வீட்டில் காவலில் வைக்கப்பட்ட பிரதமர் அப்தல்லா ஹம்டோக் இப்போது வீடு திரும்பியுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.


தலைநகர் கார்ட்டூமில் தொடர்ந்து போராட்டம் நடைபெற்று வருகிறது.

அங்கு தொலைபேசி மற்றும் இணைய சேவைகளும் முடக்கப்பட்டுள்ள நிலையில் அமைதியின்மை காரணமாக சுமார் 10 பேர் வரை கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் உள்நாட்டுப் போரைத் தடுக்கவே அதிகாரத்தைக் தாம் கைப்பற்றியதாக இராணுவத் தளபதி தெரிவித்தார். (நி)

# அக்னி-5 ஏவுகணை பரிசோதனை வெற்றி

(டில்லி)




கண்டம் விட்டு கண்டம் தாண்டி இலக்கை துல்லியமாக தாக்கி அழிக்கும் அக்னி-5 ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டுள்ளதாக இந்தியாவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏவுகணை பரிசோதனை ஒடிசா அருகில் உள்ள அப்துல் கலாம் தீவில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்தியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு வடிவமைத்துள்ள இந்த ஏவுகணை அணு ஆயுதங்களை சுமக்கக்கூடியவையாகும். அருணாச்சல் உள்ளிட்ட கிழக்கு எல்லையில் சீன இராணுவ நடவடிக்கைகளை அதிகரித்துள்ள நிலையில், குறித்த ஏவுகணை பரிசோதனை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பாகிஸ்தானின் வெற்றியைக் கொண்டாடிய 3 மாணவர்கள் இந்திய பொலிஸாரால் கைது

(டில்லி)


2021 ஐ.சி.சி. இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் இந்தியாவை பாகிஸ்தான் வென்றதைக் கொண்டாடியதாகக் கூறி மூன்று காஷ்மீர் மாணவர்களை வட இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போட்டியின் போது அவர்கள் "இந்தியாவிற்கு எதிரான மற்றும் பாகிஸ்தானுக்கு ஆதரவான" கோஷங்களை எழுப்பியதாகவும், "பகைமை மற்றும் சைபர் பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாக" அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கைதானது உத்தரப் பிரதேச மாநிலத்தின் ஆக்ரா நகரத்தில் நடந்தது. (நி-5)

# கொரோனாவின் புதிய திரிபு கர்நாடகாவில் கண்டுபிடிப்பு

(டில்லி)



கர்நாடகாவில் கொரோனாத் தொற்றின் புதிய வைரஸான AY 4.2 பரவி வருகிறது.

குறித்த வைரஸ் தொற்றினால் இதுவரை ஏழு பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் தற்போது பரவி வருகின்ற புதிய வைரஸ் திரிபுகளால் கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலை ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# போக்குவரத்து வசதிகள் இன்மை; ஆசிரியர், மாணவர்கள் பாதிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள பெரும்பாலான பாடசாலைகளுக்கு போக்குவரத்து வசதிகள் இல்லாத மிகவும் பின்தங்கிய பிரதேச பாடசாலைகளாக காணப்படுவதனால் குறித்த பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் முதல் மாணவர்கள் வரை பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மூன்றுமுறிப்பு, பனங்காமம், சிறறாட்டிகுளம், பொன்நகர், அம்பாள்புரம் கொள்ள விளாங்குளம், விநாயகபுரம் ஆகிய பாடசாலைகளும் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கோட்டை கட்டிய குளம் பாடசாலை, தென்னியன் குளம் பாடசாலை, உயிலங்குளம் பாடசாலை, புத்துவெட்டுவான் ஆகிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளும் இவ்வாறு எந்தவித போக்குவரத்து வசதிகளும் இன்றி காணப்படுகின்றன. இதேபோல் ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்தில் உள்ள அதிகமான பாடசாலைகளும் இவ்வாறான நிலைமை காணப்படுகின்றது.

எனவே குறித்த பிரதேசங்களுக்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்தி தருமாறு மாணவர்களின் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-315)


# நகர அபிவிருத்தி செயற்றிட்டம் மன்னாரில் ஆரம்பித்து வைப்பு



(மன்னார்)

நகரங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், 20 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்ட மன்னார் நகர அபிவிருத்தி செயற்றிட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டிமேல், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், நகர அபிவிருத்தி செயற்றிட்ட மாகாணப் பணிப்பாளர் டி.பி.எஸ்.திஸநாயக்க, மன்னார் நகர முதல்வர் ஞா.அன்ரனி டேவிட்சன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (4-5-285)



பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 18 இளைஞர்கள் அரச வேலை வாய்ப்புக்கு பயிலுநராக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதற்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலாளரால் வழங்கி வைக்கப்பட்டது. (படம்:-தவசீலன்)

# நெடுங்கேணியில் யானைகள் அட்டகாசம்

(அக்கராயன்)

வவுனியா நெடுங்கேணிப் பகுதி மக்கள் யானைகளினால் அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இரவு வேளைகளில் வரும் யானைகள் மக்களின் பயன் தரும் மரங்களை அழித்து வருவதுடன் ஏனைய பயிர்ச்செய்கை முயற்சிகளையும் நாசம் செய்து வருகின்றன.

யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு முக்கிய இடங்களில் யானை வேலி அமைக்கப்பட வேண்டும் என்பது பொதுமக்களின் கோரிக்கையாகும்.

பிரதேச செயலகம், கமநல சேவை நிலையம் என்பனவற்றில் நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொள்ளும் மக்கள் யானைகளினைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். (4-5-350)

# மீன் விற்கும் பாணியில் கசிப்பு விற்பனை

## மடக்கி பிடித்த பொலிஸார்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் மிகவும் சூட்சுமமான முறையில் கசிப்பு கொண்டு சென்றவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் மடக்கி பிடித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மீன் வியாபாரம் செய்வது போல் மீன் பெட்டியில் கசிப்பினை பொலித்தீன் பைகளில் கட்டி வைத்து அதற்கு மேல் மீனை வைத்து கசிப்பை எடுத்துச் சென்ற போதே குறித்த நபரை கைது செய்தனர்.

55 போத்தல் கசிப்பும் அவரிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் புதுக்குடியிருப்பு பொலிஸார் குறித்த நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (4-5-281)

# பல லட்சம் ரூபாய் நிதியில் அமைக்கப்பட்டு பயன்பாடின்றிக் காணப்படும் கட்டடம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட ஊற்றுப்புலம் கிராமத்தில் பத்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட மண்டபம் பயன்படுத்தப்படாது சேதமடைந்து வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த மண்டபத்தினை வாசிகசாலையாகப் பயன்படுத்துவதற்கு பொதுமக்கள் விரும்புகின்ற போதும் கிராமத்தின் பொது அமைப்புக்கள் இக்கட்டடத்தில் பயன்பாடு இன்றி வைத்திருப்பதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் இம்மண்டபம் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்படாமலேயே சேதமடைந்து வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இவ் விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய கவனம் செலுத்தி கிராமத்தில் வாசிகசாலை ஒன்றினை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தனர். (4-5-272)

# சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சகல பகுதியினருக்கும் கிடைக்க வேண்டும்

## மாந்தை கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் சகல பிரதேசங்களுக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று மாந்தை கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் கிருஷ்ணகோபால் தெரிவித்துள்ளார்.

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் மாந்தை கிழக்கு பிரதேசத்தின் சில பகுதிகளில் மாத்திரம் இடம்பெறுகிறது.

ஏனைய பிரதேசங்களுக்கு குறிப்பாக பனங்காமம், பாலைப்பாணி போன்ற பகுதிகளுக்கு கிடைப்பதில்லை என்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அவ்வாறான பின்தங்கிய பிரதேசங்களுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (4-5-315)

# விளம்பரப்பலகையை அகற்ற முயற்சி தவிசாளரின் செயற்பாட்டிற்கு நீதிமன்று தடை

(மன்னார்)

மன்னார் நகரப் பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான இடத்தில் தனியார் விருந்தினர் விடுதி ஒன்றின் விளம்பரப் பலகை உரிய அனுமதிகளைப் பெற்று வைக்கப்பட்ட நிலையில் குறித்த விளம்பரப் பலகையை அகற்ற மன்னார் நகரசபை தலைவர் முயற்சி மேற்கொண்ட நிலையில் குறித்த செயற்பாட்டுக்கு மன்னார் மேல் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மன்னார் நகரசபை தலைவர் தனியார் விருந்தினர் விடுதி ஒன்றின் விளம்பரப் பலகையை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில் தனியார் விருந்தினர் விடுதியின் உரிமையாளரால் குறித்த செயற்பாட்டுக்கு எதிராக மன்னார் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கை விசாரித்த மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி குறித்த விளம்பரப் பலகையை தொடர்ச்சியாக காட்சிப்படுத்த அனுமதி வழங்கியுள்ளார். (4-5-285)

# 48 மணி நேரம் மின்துண்டிப்பு?

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 48 மணித்தியால மின் துண்டிப்பை முன்னெடுக்க, மின்சார சபையின் தொழிற்சங்க ஒன்றியம் தயாராகுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, கெரவலப்பிட்டி யுகதனவி இயற்கை எரிவாயு மின் உற்பத்தி நிலையத்தின் ஒரு பகுதியை அமெரிக்காவிற்கு வழங்கும் உடன்படிக்கையினை மீளப்பெறுமாறு தெரிவித்து பணிப்புறக்கணிப்பினை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அத்துடன், குறித்த போராட்டத்தில் ஈடுபடுவதாக 11 கட்சிகளின் தலைவர்கள் வாக்குறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 2030 இற்குள் காசநோயை ஒழிப்போம்




(கொழும்பு)

2030 ஆம் ஆண்டளவில் நாட்டில் முற்றாக ஒழிக்க இலங்கை உறுதி பூண்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஆசியாவில் காசநோய் தொடர்பான உலக சுகாதார ஸ்தாபனத்தின் மாநாட்டில் ஸூம் மூலம் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் வருடாந்தம் சுமார் 8 ஆயிரம் காசநோயாளிகள் பதிவாவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (நி-5)

## களனி பல்கலைக்கழக வேந்தர் வெலமிடியாவே குசலதம்ம தேரர் காலமானார்



(கொழும்பு)

கொழும்பு சிலாபம் தெதியாவ பிரதான சங்கநாயக்கரும், களனி வித்யாலங்கார மஹா பிரிவேனாவின் பிரிவேனாதிபதியும், களனி பல்கலைக்கழகத்தின் வேந்தருமான கலாநிதி வெலமிடியாவே குசலதம்ம தேரர் காலமானார்.

அவர் தனது 84 ஆவது வயதில் காலமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## ஆனந்தம் தரும் அனுமன் வழிபாடு



### வடை மாலை சாத்துவது ஏன்?

போர்க்களத்தில் கொழுப்பு நிறைந்த அரக்கர்களையும், தமது உடல் வலிமையால் வடை தட்டுவது போல் தட்டி துவம்சம் செய்தவர் ஆஞ்சநேயர். அதனால் தான் கொழுப்பு சத்து நிறைந்த உளுந்தை சேர்த்து அவருக்கு வடை மாலை செய்து சாத்துகின்றனர்.

சீதாதேவி பரிசாக வழங்கிய முத்து மாலையை சுவைத்து அதில் ராமசுகம் உள்ளதா என்று பார்த்து பிய்ந்து எறிந்தவர் அனுமான். அது போலவே கழுத்தில் அணிவிக்கப்பட்ட வடை மாலையையும் அவர் சுவைத்து பார்ப்பதாக ஐதீகம்.

### உடல் முழுவதும் செந்தூரம்

அனுமான் கோவில்களில் அனுமாருக்கு செந்தூர திலகமிட்டு பூஜை செய்வது வழக்கம். சீதாதேவி ஒரு நாள் தனது நெற்றிக்கு செந்தூர பொட்டை வைத்து கொண்டு இருந்தார். இதை அருகில் இருந்து கவனித்த அனுமான் அதற்கு விளக்கம் கேட்டார்.

அதற்கு சீதாதேவி பதில் கூறுகையில், எனது கணவர் நீண்டகாலம் ஆரோக்கியத்துடன் வாழ்வதற்காகவே செந்தூரம் பூசுவதாக கூறினார். இதையடுத்து அனுமான் கருணைக் கடவுளான ராமபிரான் என்றும் நீடூழி வாழ்வதற்காக தனது உடல் முழுவதும் செந்தூரத்தை பூசிக் கொண்டார். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## சுகாதார விதி மீறல்; மேலும் 21 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரப் பகுதியில் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக 2020 ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 81 ஆயிரத்து 417 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-5)

## மட்டக்களப்பில் வாகன விபத்தில் இளைஞன் உயிரிழப்பு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - காத்தான்குடி, குட்வின் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை கார் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது காயமடைந்த 20 வயதான இளைஞர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொரு இளைஞர் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்துடன் தொடர்புடைய காரின் சாரதியைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 240 | 240 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 200 | 140 |
| தக்காளி | 180 | 200 | 180 | 220 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 40 |
| கோவா | 160 | 130 | 150 | 160 |
| கரட் | 100 | 130 | 160 | 240 |
| பூசணி | 60 | 60 | 50 | 60 |
| புடோல் | 200 | 180 | 160 | 200 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 220 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 210 | 180-220 | 240 |
| பாகற்காய் | 400 | 480 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 140 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 160 |
| பயற்றங்காய் | 250 | 250 | 160 | 300 |
| லீக்ஸ் | 200 | 240 | 240 | 250 |
| பீற்றூட் | 50 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 200 | 300 | 350 | 340 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 150 | 300 |
| போஞ்சி | 300 | 200 | 220 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 180 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 120 | 80 |
| தேசிக்காய் | 480 | 400 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 50-70 | 50-80 |
| இராசவள்ளி | 350 | 250 | 280 | 300 |
| வெங்காயப்பூ | 350 | 250 | -- | 280 |
| முள்ளங்கி | 120 | 120 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 100 | 30 | 30 |
| ஈரப்பலா | -- | -- | -- | 140 |

# நாட்டில் ஆபத்து நீங்கவில்லை

## டெல்டா பிறழ்வு குறித்து இராஜாங்க அமைச்சர் தகவல்

**(கொழும்பு) டெல்டா பிளஸ் பிறழ்வு நாட்டிற்குள் நுழையும் அபாயம் உள்ளதால் இலங்கையும் ஆபத்து வளையத்துக்குள்ளேயே உள்ளது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொவிட் -19 நோயாளர்கள் மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டாலும், ஆபத்து குறையவில்லை.

ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் உட்பட்ட நாடுகளில் தடுப்பூசித் திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட நிலையில், தற்போது டெல்டா பிளஸ் பிறழ்வால் ஆபத்து மீண்டும் அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். ( நி)

# சீமெந்தின் விலை மேலும் உயரும்

## இறக்குமதியாளர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சீமெந்து விலை தொடர்ந்து உயரும் என சீமெந்து இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

உலக சந்தையில் சீமெந்து விலை தொடர்ந்து அதிகரித்துச் செல்கிறது. அத்துடன் இறக்குமதிச் செலவும் அதிகரித்துள்ளமையே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட காரணம் என அவர்கள் சுட்டிக்காட்டினர்.

தற்போது இறக்குமதி செய்யப்படும் சீமெந்து மூடை ஒன்றின் விலை மட்டும் 1300 ரூபாயை தாண்டுவதாகவும் எதிர்காலத்தில் இதன் விலை மேலும் உயரலாம் எனவும் தெரிவிக்கின்றனர்.


சமீபத்தில் சீமெந்துக்கான கட்டுப்பாட்டு விலையை அரசு நீக்கிய நிலையில், சீமெந்து மூடைக்கு ரூ.1090 என புதிய விலையை அந்நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

ஆனால், தற்போதைய விலை வரம்பு ரூ.1,300ஐ தாண்டும் என இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், கட்டுமானத் தொழிலின் விலை கடுமையாக உயரும் நிலை உள்ளது. ஏற்கனவே சீமெந்து தட்டுப்பாட்டால் கட்டுமானத் தொழில் கடுமையாக முடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கோட்டாவுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்கு

## தொல். திருமாவளவன் வரவேற்பு



(சென்னை)

இலங்கை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிற்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் புலம் பெயர் தமிழர்கள் சார்பில் வழக்குத் தாக்கல் செய்துள்ளமையை வரவேற்பதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அறிவித்துள்ளது.

அந்த கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவிலேயே இவ் வாறு தெரிவித்தார்.

ஆட்கடத்தல்கள், சட்ட விரோதமான தடுத்து வைப்புக்கள், சித்திரவதைகள் போன்றனவற்றைப் புரிந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டவர்களுக்கு எதிராக சர்வ தேச குற்றவி யல் நீதிமன் றத்தில் Global Rights Compliance LLP (GRC) என்ற சட்ட வல்லுனர் அமைப்பு வழக் குத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையி லேயே, குறித்த விடயம் தொடர்பில் தான் வரவேற்பு தெரிவிப்பதாக விடுதலைச் சிறுத் தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்தார். (நி)

# தேர்தலை எதிர்கொள்ளத்தயார்

## –ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி–

(கொழும்பு)

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள எந்த தேர்தலையும் எதிர்கொள்வதற்கு தயாராகவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக்கொண்ட போதே அவர் இதனைக் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தற்போது மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் தேர்தல் தொகுதிகள் ஊடாக போட்டியிடும் வேட்பாளர் தெரிவு இடம் பெறுகிறது எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# இன்று ஒரு தகவல்

## உற்சாகம் தேவை

எப்போது பார்த்தாலும் களைப்பு, சலிப்பு, விரத்தி, வெறுப்பு, ஏமாற்றம். ஆனால் எதிர் வீட்டுக்காரனைப் பார்த்தால் முகத்தைச் சுளிப்பதே இல்லை. எப்போதும் சிரித்துக்கொண்டே இருக்கிறார். சோர்வே அடைவதில்லை.

வைத்தியரிடம் காண்பித்தால், உங்களுக்கு உடலில் எவ்விதக் கோளாறுமில்லை என்கிறார். அப்படியானால் இந்த வேறுபாட்டிற்குக் காரணம் என்ன? வேறு ஒன்றுமில்லை, உற்சாகம் இல்லாதது தான் காரணம். எனவே, கோளாறு உடலில் அல்ல, உள்ளத்தில். இதற்கு எந்த வைத்தியராலும் சிகிச்சை அளித்துக்கொள்ள வேண்டும்.

முயற்சி என்ற இடத்திலிருந்து கிளம்பும் உழைப்பு என்னும் ரயில், வெற்றி என்னும் இடத்தை அடையவேண்டுமானால் அதற்கு உற்சாகம் என்னும் பச்சை விளக்கு எப்போதும் எரிந்து கொண்டிருக்க வேண்டும்.

நமக்குத் தொடர்பு இல்லாத வேலை, நாம் எந்த இலாபத்தையும் அடையாத வேலை என்றால் அதில் உற்சாகம் குறையத்தான் செய்யும்.

ஒரு செயலில் இறங்கும் முன் நன்கு சிந்தித்து அதைப் பற்றி எல்லா உண்மைகளையும் முன் வைத்து முடிவுக்கு வரவேண்டும். முடிவுக்கு வந்து விட்ட பின் உற்சாகத்தோடு செயற்படவேண்டும்.

இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் மனத்திற்கும் நமக்கும் போராட்டம் ஏற்படக்கூடாது. நம் எண்ணமும் செயலும் இணைந்துவிட வேண்டும். நம்முடைய போராட்டமெல்லாம் நம்முடைய இலட்சியங்களை அடைவதில் தான் இருக்க வேண்டுமே தவிர, நமக்குள்ளேயே இருக்கக்கூடாது.

உற்சாகம் இருந்தால் ஊக்கம் பிறக்கும்; ஊக்கம் பிறந்து விட்டால் இழந்த சக்தியைத் திரும்பப் பெற்றுவிடலாம். உடலுழைப்பை முடிந்தவரை வீணாக்கக்கூடாது. பற்றியில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் மின்சாரத்தை எப்போது தேவையோ அப்போது மட்டும் பயன் படுத்துகிறோம் அல்லவா? அதைப்போலவே, நம்முடைய சக்தி யையும் தேவையில்லாமல் செலவழிக்கக்கூடாது.

உற்சாகத்தை இழந்து விடாமல் இருக்க ஒரு வழி இருக்கிறது. எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு வேலையைக் கட்டிக்கொண்டு அழக்கூடாது. எல்லா வேலைகளையும் ஒதுக்கி எறிந்துவிட்டு, மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும் செயல்களில் ஈடுபடவேண்டும்.

எளிய சிக்கல் மட்டுமல்ல. எத்தகைய சிக்கலாக இருந்தாலும் சரி, உற்சாகமிருந்தால் எத்தகைய இன்னல்களையும் தூள் தூளாக்கிவிடலாம்.

**லேனா தமிழ்வாணன்**




## ஓடு சுமையானதா?



ஒரு காட்டில் ஆமையும், நத்தையும் நண்பர்களாய் இருந்தன. அவை இரண்டுக்கும் நீண்ட காலமாக, ஒரு மனக்குறை இருந்தது.

தங்களால் வேகமாக நடக்கவோ, தாவிக் குதித்து ஓடவோ முடியவில்லை என்ற மனக்குறைதான் அது.

ஒருநாள், அவை இரண்டும் நடந்து சென்று கொண்டிருந்த போது, ஓர் அழகிய வெள்ளை நிற முயல் தாவிக் குதித்து, ஓடி வருதைக் கண்டன. "முயலே நில்!"" என்றது ஆமை.

முயல் நின்றது. "நீ எப்படி இவ்வளவு வேகமாய் தாவிக் குதித்து ஓடுகிறாய்?" என்று கேட்டது நத்தை.

"இது என்ன கேள்வி! உங்களுக்கு இருப்பது போல், என் முதுகில் கனமான ஓடில்லை.

அந்தச் சுமை இல்லாததால், வேகமாக ஓடுகிறேன்!" என்று சொல்லி விட்டு, முயல் அந்த இரண்டையும் இளக் காரமாகப் பார்த்தது.

"ஓஹோ! எங்களின் வேகக் குறைவுக்கு எங்கள் ஓடுதான் காரணமா?"

"ஆமாம்! நீங்கள் உங்கள் ஓடுகளைக் கழற்றிப் போட்டு விட்டால், என்னைப் போல் வேகமாக ஓடலாம். (தொடரும்)

# மகாபாரதம்




**அறியாமை பற்றி அறிதல்**

தருமர் பீஷ்மரை நோக்கி.."பிதாமகரே! அறியாமை பற்றி அறிய விரும்புகிறேன்" என பணிவுடன் கேட்க பீஷ்மர் சொல்லத் தொடங்கினார்.

"மனிதன் அறியாமையால் பாவம் செய்கிறான். அதனால் தனக்குத் தகுதியானதை அறிந்து கொள்ளாது சாதுக்களிடம் குறை காண்கிறான்.

உலக நிந்தனைக்கு ஆளாகிறான். தீயகதியாகிய நரகத்திற்கு அறியாமையே காரணம் ஆகிறது. அதனால் ஆபத்தில் சிக்கித் துன்பம் அடைகிறான்.

ஆசை, பகை, காமம், சினம், கர்வம், விருப்பு, வெறுப்பு, பிறர் ஆக்கம் கண்டு பொறாமை கொள்ளுதல் ஆகிய இவையாவும் அறியாமையால் தோன்றுபவையே! ஆகவே அறியாமையை அகற்றுவாயாக!" என்றார்.

உடன் தருமர் "மேலோனே! தருமம் பலவகையாகக் காணப்படுகிறதே, எது சிறந்த தருமம் எனக் கூற முடியுமா?" என வினவ "பேரறிவு படைத்த தருமா மகரிஷிகள் பல வகையான தருமங்களை உபதேசித்து இருக்கிறார்கள். அவற்றில் மிகச் சிறந்தது புலனடக்கம் ஆகும். இதுவே முக்திக்குக் காரணமாகும். புலன் அடக்கம், தானம், யாகம் ஆகியவற்றை விட மேலானது.

புலனடக்கம் உடையவனின் முகம் பொலிவுடன் ஒளிவீசும். புலன் அடக்கம் தரும சிந்தனையை வளர்க்கும். உயிர்களிடத்து அருளுடைமையைத் தூண்டும்.

**புலனடக்கத்திற்கான அடையாளங்களைத் தெரிந்து கொள்**

பொறுமை, துணிச்சல், கொல்லாமை, நன்மை, தீமைகளைச் சமமாக பாவித்தல், வாய்மை, நேர்மை, நாணம், சினம் இன்மை, இன்சொல், யாவரிடத்தும் அன்புடன் பேசுதல் இவை யெல்லாம் புலனடக்கத்தால் ஏற்படும்.

புலனடக்கம் உள்ளவனை யாரும் பழிக்க மாட்டார்கள். அவன் ஆசை அற்றவன். அற்ப சுகங்களை விரும் பாதவன். உற்றார், உறவினர் என்ற பந்தங்களினின்றும் அவன் விடுபட்டவன். (தொடரும்)

கடந்து வந்த வாழ்க்கைப் பாதையை ஒருமுறை பெருமிதத்துடன் திரும்பிப் பார்த்தால் நீங்கள் மேலும் செல்லவேண்டிய அளவுக்குச் சிந்தனையும் உற்சாகமும் உங்களிடமிருந்து பெருகும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒரே நாடு - ஒரே சட்டம் இதை எடுப்பது அனைத்து இனமாக இருக்க வேண்டும்

ஒரே நாடு – ஒரே சட்டம் என்ற கோசத்துடன் சட்டவரைபைத் தயாரிக்கின்ற ஜனாதிபதி செயலணி குறித்த வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஞானசார தேரர் தலைமையில் 13 பேர் கொண்ட மேற்படி ஜனாதிபதி செயலணியில் தமிழர்கள் எவரும் இல்லை என்பது ஈண்டு கவனிக்கத்தக்கது.

மேற்படி செயலணியில் சிங்களவர்கள் ஒன்பது பேரும் முஸ்லிம்கள் நான்கு பேருமாக மொத்தம் 13 பேர் உள்ளடங்கியுள்ளனர்.

ஒரே நாடு – ஒரே சட்டம் என்ற சட்டவரைபைத் தயாரிப்பதில்கூட தமிழர்கள் இணைக்கப்படவில்லை எனும்போது, தமிழர்கள் என்றாலே சிங்கள ஆட்சியாளர்களுக்கு இவ்வளவு குலைநடுக்கமா? என்று எண்ணத் தோன்றும்.

அதுதவிர, இதன் மறுபக்கத்தில் தமிழர்களை எவ்வளவுக்கு ஓரங்கட்ட முடியுமோ அந்தளவுக்கு அவர்களை ஓரங்கட்ட வேண்டும் என்பதில் சிங்களப் பேரினவாதம் மிகவும் உறுதியாக இருக்கிறது என்பதை வெளிப்படுத்துவதாகவும் மேற்படி விடயம் அமைகிறது.

கூடவே ஆட்சித் தரப்புக்கு ஆலவட்டம் பிடிக்கின்ற தமிழ்த் தரப்புகளைக்கூட ஆட்சியாளர்கள் கிஞ்சித்தும் பொருட்படுத்தவில்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இதனை நாம் கூறும்போது, அட இதுகளை விடுங்கப்பா. சட்டத்தை மதிக்காமல் நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட ஞானசார தேரரைத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்படுகின்ற சட்டவரைபை ஞானசாரரே உரிய மதிப்புக்கொடுத்து ஏற்றுக் கொள்வாரா? என்பது தெரியவில்லை.

நிலைமை இதுவாக இருக்கும்போது, இது பற்றியெல்லாம் அலட்டிக் கொண்டு நேரத்தை விரயமாக்காதீர்கள் என்று நீங்கள் முணுமுணுப்பதையும் நாம் அறியாமல் இல்லை.

எது எவ்வாறாயினும் தமிழர்கள் விடயத்தில் அரசாங்கம் இன்னமும் அச்சத்துடனும் ஐயத்துடனும் இருக்கிறது என்பது மட்டும் தெரியவருகிறது.

தவிர, ஒரே நாடு – ஒரே சட்டம் என்ற வரைபை உருவாக்குவதற்கு மூலகாரணமே தமிழர்கள்தான்.

அதாவது மிகப்பெரும் விடுதலைப் போராட்டத்தை நடத்தி தங்களின் இனப்பற்றை உலகுக்கு எடுத்துக் காட்டியவர்கள் தமிழர்கள்.

உலக நாடுகளின் உதவியுடன் விடுதலைப் போராட்டம் முடிவுறுத்தப்பட்டாலும் எதிர்காலம் எவ்வாறாக மாறும் என்பதை அனுமானிக்க முடியாது.

எனவே எதிர்காலப் பயத்தினின்றும் ஆற்றுப்படவும் ஆறுதலடையவும் இருக்கின்ற ஒரே வழி ஒரே நாடு – ஒரே சட்டம் என்பதை சட்டவரைபாக ஆக்கி, அதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதுதான் என அரசாங்கம் கருதுகிறது.

இந்நிலையில் தமிழர்கள் எவரையும் உள்வாங்காமல் ஞானசார தேரர் தலைமையில் ஜனாதிபதி செயலணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு அரசாங்கம் எடுத்த இந்த முடிவுக்குள் ஒரே நாடு – ஒரே சட்டம் என்ற வரைபுக்கு உலை வைக்கக்கூடியதான ஏற்பாட்டை ஆளுந்தரப்பே செய்துள்ளதெனக் கூறலாம்.

ஆம், ஒரே நாடு – ஒரே சட்டம் என்பதை அனைத்து இன மக்களும் ஒன்றாகச் சேர்ந்து எடுக்க வேண்டும்.

இதைவிடுத்து நான் கட்டளையிடுவதை நீ கடைப்பிடிக்க வேண்டும் என்றால், அங்குதான் உரிமைப் போராட்டம் உயிர்ப்புப் பெறுகிறது என்பது உணரப்பட வேண்டும்.

# தனங்கிளப்பில் டிப்பர் - பட்டா நேருக்கு நேர் மோதி விபத்து

## 6 பேர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - தனங்கிளப்பு பகுதியில் டிப்பர் வாகனமும், பட்டா ரக வாகனமும் ஒன்றுக்கொன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் படுகாயமடைந்தனர்.

குறித்த விபத்துச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

யாழ்.நகரிலிருந்து பூநகரி நோக்கிச் சென்றுகொண்டிருந்த பட்டா ரக வாகனமும், யாழ்.நகர் நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் ரக வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. மேற்படி விபத்துச் சம்பவத்தில் 6 பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் இரண்டு வாகனங்களும் கடும் சேதங்களுக்கு உள்ளாகின. குறித்த சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(ம-3,18,30)

### மன். பள்ளிமுனை கடற்பரப்பில்

# கடலட்டை பிடித்த 3 மீனவர்கள் கைது

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனை கடற்பரப்பில் அனுமதி இன்றி இரவு நேர கடல் அட்டை பிடிக்கும் தொழிலை மேற்கொண்ட 3 மீனவர்கள் நேற்றைய தினம் வியாழக்கிழமை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 3 மீனவர்கள் மற்றும் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட,453 கடல் அட்டைகள், படகு இயந்திரம், அட்டை பிடிப்பதற்காக பயன்படுத்தப்படும் கண்ணாடி, சப்பாத்து என்பன மன்னார் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் நேற்று வியாழக்கிழமை கடற்படையினர் ஒப்படைத்தனர்.

குறித்த 3 மீனவர்களிடம் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் கடற்றொழில் திணைக்களத்தின் அதிகாரத்திற்கு அமைவாக கைது செய்யப்பட்ட மீனவர்கள் மூவரும் நேற்று வியாழக்கிழமை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து பெறப்பட்ட சுமார் 453 கடல் அட்டைகள் பகிரங்க ஏலத்தில் விடப்பட்டது. கடல் அட்டை தொழில் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை மட்டுமே கடற்பரப்பில் அட்டை பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட கடல் அட்டைகளின் உள்ளூர் சந்தை மதிப்பு ஒரு இலட்சத்தி 50 ஆயிரம் ரூபாய் என கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-3,285)

### சா/ தரப் பரீட்சைக்கு தோற்றியவர்கள்

# தொழிற்பாடத்துறைக்கு விண்ணப்பிக்க அனுமதி

யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் 13 வருட உத்தரவாதம் அளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டம் கடந்த 2017 ஆம் ஆண்டு தொடக்கம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

2022 கல்வியாண்டின் அனுமதியின்போது 2020, 2021 க.பொ.த சாதாரண தர பரீட்சையில் தோற்றி 9 பாட சித்தியின்மை காணப்படினும் பரீட்சை பெறுபேறுகள் கருத்தில் கொள்ளப்படாமல் தொழிற்பாடத்துறையை கற்க இணைத்து கொள்ளப்படுவார்கள்.

அந்த வகையில் தொழிற்பாடத்துறையின் ஐந்தாம் கட்டத்தில் கிராபிக் வடிவமைப்பு (Graphic design), பிரயோக தோட்டக்கலை (Applied Horticulture). சுற்றுலா விருந்தோம்பல் கல்வி (Tourism & Hospitality Management), கலையும் வடிவமைப்புமும் (Art & Design), நீர் வழங்கல் கல்வி (Aquatic Studies) போன்ற பாடநெறிகளுக்கான அனுமதிகள் எதிர்வரும் 1 ஆம் திகதி திங்கள் தொடக்கம் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொழிற்பாடத்துறை அனுமதிக்கு பாடசாலை விடுகைப்பத்திரம், பிறப்புச்சான்றிதழ், க.பொ.த சாதாரண தர பரீட்சை சான்றிதழ் போன்ற ஆவணங்களுடன் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-3)

## மருத்துவக் குறிப்பு

எலுமிச்சம்பழச்சாற்றுடன் சம அளவு நல்லெண்ணெய் கலந்து உள்ளுக்குச் சாப்பிட இரண்டொரு வேளையிலேயே நீர்க்கடுப்பு நீங்கி விடும்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

அறம், பொருள், இன்பம், விடு என்னும் புருஷார்த்தங்களை அடையும் உபாயங்கள்

மாசிலா மனமே ஈசன் கோயில், பயிருக்கு முள்வேலி, பணத்துக்கு தருமமே வேலி, பாலும் தேனும் உடலுக்கு உறுதி, வேலும் மயிலும் உயிருக்கு உறுதி, ஆறுதலை அமலன் ஆறுதலையருள்வான். (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கல்வியியற் கல்லூரி கோப்பாய், கோப்பாய் நீர் வழங்கல் சபை, கோப்பாய் இராணுவ முகாம், கிருஷ்ணன் கோவிலடி, இராஜவீதி கோப்பாய், அராலி, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை, வட்டுக்கோட்டை வி.சி. அலுவலகம் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** அரசர் கேணி, இத்தாவில், கச்சார்வெளி, முகமாலை, மாங்குளம் சந்தி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** இலங்கை வங்கி சுகாதாரத் திணைக்களம், கச்சேரி தேசிய சேமிப்பு வங்கி வவுனியா, மக்கள் வங்கி வவுனியா, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், வவுனியா மருத்துவமனை, நீர்வழங்கல் (கச்சேரி), பிரதேச செயலக அலுவலகம், மன்னார் வீதி, வவுனியா கச்சேரி, புகையிரத நிலைய வீதியடி, வவுனியா நகரம், ஆசிகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மெய்ப்பொருளின் வகைகள்

எந்தப்பொருளும் ஒரே ஒரு வகையாக மட்டும் இல்லாத போது, ஏன் இறைவன் மட்டும் ஒருவனே என்றிருக்கவேண்டும்? இந்தப் படைப்பு முழுவதையும் வெளிப்படுத்திய பல வகைகளை விரும்புகின்ற அந்த இறைவன் வெளிப்படுகிறார்.

பல தோற்றங்களில் காட்சியளிக்கும் சுதந்திரத்தைச் சிலர் இறைவனுக்குக் கொடுப்பதில்லை. ஒரே தன்மையில்தான் அவரைக் காண விரும்புகிறார்கள்.

நீங்கள் இடத்திற்கேற்ப உங்கள் தோற்றத்தை மாற்றிக் கொள்கிறீர்கள். அப்படியிருக்கும்போது மெய்ப்பொருளில் பல வகைகள் இல்லை என்று எப்படி எண்ணலாம்? பண்டைய மக்கள் இதை அறிந்தார்கள். அதனால்தான் அவர்கள் தெய்வீகத்தை எண்ணற்ற தன்மைகளாலும் தோற்றங்களாலும் உய்த்தறிந்தனர். (தொடரும்)

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

04

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்




**அக்குரோணி அல்லது அக்ரெளகிணி என்பது, பழங்காலத்து போர் அணிவகுப்பு வகைகளுள் ஒன்று. இது 21,870 தேர்களையும், 21,870 யானைகளையும், 65,610 குதிரைகளையும், 109,350 படை வீரர்களையும் உள்ளடக்கியது. இந்த எண்கள் ஒவ்வொன்றிலுமுள்ள இலக்கங்களைக் கூட்டும் போது 18 என்னும் எண் கிடைக்கும்.**

### விரற்கடை அளவைகள்

விரல் (கணிதம்) அல்லது விரற்கடை (ஆங்கிலம்: Finger (unit)) என்பது பண்டையத் தமிழர்கள் நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்திய அளவை முறையின் அலகுகளில் ஒன்று. அளப்பதெற்கென்று தனிப்பட்ட அளவு கருவிகளை முழுவதுமாகச் சார்ந்திராமல், தமது உடம்பின் பாகங்களைக் கொண்டு அன்றாட வாழ்க்கையில் தேவைப்படும் பொருட்கள், (கயிறு; கம்பு, துணி...) நீளங்கள் மற்றும் இரு குறிப்பிட்ட பொருட்களுக்கு இடைப்பட்ட தூரம் (ஓரளவு சிறிய தான) ஆகியவற்றை அளக்கும் வழமையைத் தமிழர்கள் கொண்டிருந்தனர்.

அவர்கள் பயன்படுத்திய அலகுகளுள் விரற்கடை சாண் மற்றும் முழம் ஆகியவை பரவலானவை. ஒவ்வொரு மனிதருக்கும் உடல் அளவுகள் மாறுபடும் என்பதால் விரற்கடை, சாண் மற்றும் முழம் ஆகிய அலகுகள் குறிக்கும் தூரம் அளக்கும் ஆட்களைப் பொறுத்து மாறுபடும் தன்மையுடையது என்றாலும் சாதாரண மக்களும் எளிதாக பயன்படுத்தக்கூடிய ஒரு அளவை முறையாக உள்ளது குறிப்பிடத்தக்கது.




ஒரு (முதிர்ந்த) மனிதரின் கையில் அமைந்துள்ள ஒரு விரலின் அகலம், ஒரு **விரல்** அல்லது **விரற்கடை** அளவாகும் (படம்-1). விரல்கடை கிட்டத்தட்ட 3/4 அங்குலமாகும். விரல் (கணிதம்) என்பது பண்டையத் தமிழர்கள் நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்திய அளவை முறையின் அலகுகளில் ஒன்று. தமிழ் இலக்கியங்களில் விரற்கடையின் பயன்பாடு காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக திருமந்திரத்தைக் கூறலாம்

### திருமந்திரத்தில் விரற்கடை அளவு பற்றி......

ஒரு கரு உருவாகும் முன்னரே பிறக்கப் போகும் உயிரின் ஆயுள் என்ன? என்பதை துள்ளியமாகக் கணக்கிட்டு கூறியுள்ளார் எங்கள் ஆசான் திருமூலர். இந்த கணக்கிற்கு இன்றைய விஞ்ஞானிகள் வாயடைத்துப் போவார்கள்.

"பாய்ந்தபின் அஞ்சு ஓடில் ஆயுளும் நூறு ஆகும்
பாய்ந்தபின் நால் ஓடின் பாரினில் எண்பதாம்
பாய்ந்திடும் வாயுப் பகுந்து அறிந்து இவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலும் ஆமே" (திம 479)

**இப் பாடலின் பொருள்:**

பாய்ந்தோடி விழும் விந்தானது 5 விரகடை (3.75 inch) ஓடி சென்று விழுந்தால் அதாவது பெண்ணின் கருமுட்டையின் அருகில் பிறக்கும் உயிரானதின் ஆயுள் 100 என்லாம்.4 விரகடை (3 inch) ஓடி விழுந்தால் பிறக்கும் உயிரின் ஆயுள் 80 எனலாம். இந்த சூட்சுமம் யோகிகள் நன்கு அறிவர்.

**இதற்குரிய அறிவியல் விளக்கம்:**

பாயும் விந்துவானது கருமுட்டையின் அருகில் சென்று விழுந்தால் அந்த விந்துவின் ஆயுள் சேமிக்கப்படுகிறது. உயிரின் ஆயுளும் அதிகரிக்கிறது. அதுவே கருமுட்டையின் அருகில் விழாமல் போனால் அந்த விந்தானது கருமுட்டைக்கு நீந்தி செல்லும் பட்சத்தில் தனது சக்தியை சிறிது இழக்கிறது. அதன் பலனாக உயிரின் ஆயுளும் குறைகிறது.

விரல் கணிதம் சம்பந்தமான திருமூலரின் இன்னுமொரு பாடல் (திருமந்திரம் பாடல் எண்: 557).

"கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண்டு அங்குலம்
நீடுவர் எண்விரல், கண்டிப்பர் நால்விரல்
கூடிக்கொள்ளில் கோல அஞ்செழுத்து ஆமே."

**இப் பாடலின் பொருள்:**

"கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்" என்ற திருமந்திரப் பாடலுக்கு இரு வெவ்வேறான பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று கீழே தரப்படுகிறது.

மனிதன் பிறக்கும் போது மூச்சுக் காற்று இரண்டு நாசித்துவாரங்கள் வழியே குடிபுகுந்தன. அவை இடகலை மற்றும் பிங்கலை என்ற சுவாசமாகும்.

இரண்டிலும் சராசரி 12 விரல் கடை (அவரவர் கைவிரலுக்கு) தூரம் உள்ள காற்றுவரை உள்ளே செல்லும் அதுபோல 12 விரற்கடை தூரம் வரை காற்றை வெளிவிடும். இவ்விதம் உள்ளே சென்ற காற்றில் உள்ள உயிர்சக்தி (பிரபஞ்ச சக்தி) 8 விரற்கடை அளவு மட்டுமே கிரகிக்கப்படும்.

மீதம் நான்கு விரற்கடை அளவு உயிர் சக்தி வீணாகிறது. இப்படி வீணாகப் போகின்ற நான்கு விரற்கடைச் சக்தியை வாசியோகம் செய்து கிரகிக்க வைத்தால் உடல் அழியாது.

**விரல் (கணிதம்) என்பது பண்டையத் தமிழர்கள் நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்திய அளவை முறையின் அலகுகளில் ஒன்று. தமிழ் இலக்கியங்களில் விரற்கடையின் பயன்பாடு காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக திருமந்திரத்தைக் கூறலாம்.**

அழியா உடல் பெற்று இறைநிலை அடைவர். இது சித்தர்களின் சக்திச் சமன்பாடு. (இங்கு 1 விரற்கடை = 1 அங்குலம் எனக் கருதப்பட்டுள்ளது. இவ் அங்குலமானது இன்றைய பிரிட்டிஷ் அளவீட்டின் அங்குலமல்ல.)

**விரல் கணிதம் சம்பந்தமான திருமூலரின் பாடல் ஒன்று**
**"கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்**
**ஓடுவர் மீளுவர் பன்னிரண்டு அங்குலம்**
**நீடுவர் எண்விரல், கண்டிப்பர் நால்விரல்**


நமது வலது கையின் கட்டை விரலை மடித்துக் கொண்டு மற்ற நான்கு விரல்களையும் ஒட்டினால் போல வைத்த நிலையில் ஆட்காட்டி விரலுக்கும் சுண்டு விரலுக்கும் இடைப்படும் அகலப் போக்கான அளவு நான்கு விரற்கடை எனப்படும்.

இருபத்து நான்கு விரல் கொண்டது ஒரு முழம் ஆகும். விரல் பன்னிரண்டு கொண்டது ஒரு சாண் ஆகும். சாண் இரண்டு கொண்டது ஒரு முழம்.

1 விரல் = 1/24 முழம் = 1/24* 18 அங்குலம் = 3/4 அங்குலம்.

1 விரல் = 1/12 சாண் = 1/12 * 9 அங்குலம்=3/4 அங்குலம்.

(தொடரும்...)




**ஐந்து விரல்களையும் விரித்தநிலையில் வைத்தால் கட்டை விரலின் மேல் நுனியில் இருந்து சுண்டுவிரலின் மேல் நுனிவரை உள்ள அளவு ஒரு சாண் எனப்படும்.**

## மறுஅறிவித்தல்...

விடுத்துள்ளது.

இதனால் நாட்டைச் சூழவுள்ள கடற் பரப்புக்களில் மழையுடனான வானிலைத் தாக்கம் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். (ம-3)

## 22 பேர்...

இதனால் இலங்கையில் இதுவரையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 696 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கரையோரங்...

யாழ். மாவட்டத்தின் கடற்கரையோரங்களில் காற்றின் வேகமானது 60 தொடக்கம் 65 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால், கடற்கரையை அண்டிய பகுதிகளில் வசிப்போர் மிகவும் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கடற்றொழிலுக்குச் செல்வோர் மிகவும் அவதானமாகச் செயற்படுமாறும், மறு அறிவித்தல் வரும் வரை அவதானமாகச் செயற்படுமாறும் யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மேலும் அறிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-3,18,33)

## மின்னல் தாக்கி...

இச்சம்பவம் கடந்த 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை முல்லைத்தீவு துணுக்காய் தேராங்கண்டல் கிராமத்தில் நிகழ்ந்துள்ளது.

தேராங்கண்டல் அ.த.க பாடசாலையின் தரம் 9 மாணவனான சசிக்குமார் ஆதவன் (வயது - 14) என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

தேராங்கண்டல் குளப் பகுதியில் இன்னொருவருடன் மாடு மேய்த்துக் கொண்டிருந்தபோது மின்னல் தாக்கியதில் மாணவன் உயிரிழந்துள்ளார். (ம-3,350)

## தவறிவிழுந்த...

யில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் யேசுநேசன் கமலாம்பிகை (வயது - 73) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி வயோதிப மாது குளியலறையில் விழுந்ததாக தெரிவித்து மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றபோது அவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டார். (ம-3,60)

## இலங்கையில்...

பட்டுள்ள இந்த பாதை நேற்று விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

இது கொழும்பு துறைமுக நகரத்தில் உள்ளது.

மூன்று 2 கிமீ பந்தயப் பாதைகளைக் கொண்ட கொழும்பு டூன்ஸ் பந்தய மைதானம், துறைமுக நகரத்தில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்ட ATV Track Running on the Sand Dunes நாட்டில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது மணல் பாதையாகும்.

இவ்வாறான சாகச விளையாட்டுக்கள் அதிகளவான சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு ஈர்ப்பதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (ம-3)

## நாட்டின் இறை...

பற்றி பேசிய அனைத்து கதைகளும் வெற்று பேச்சுக்களாகியுள்ளன எனவும் கூறியுள்ளார்.

69 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாக்களித்து ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தை தெரிவு செய்தனர்.

அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் தூதரகங்களுக்கு சென்று அடிபணியும் நிலைமையில் நாடு சர்வதேசத்திற்கு முன்னால் கேவலப்படுத்தப்பட்டுள்ளது என்றார். (ம-3)

## ராஜபக்ஷவை...

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசுக்குள் மோதல் ஏற்பட்டுள்ளது எனவும், பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் தனிவழிப்பயணத்துக்குத் தயாராகி வருகின்றனர் எனவும் வெளியாகும் தகவல்களுக்குப் பதிலளிக்கையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர்.

"தேசிய வளங்களையும், நாட்டையும் பாதுகாக்கவே 69 இலட்சம் பேர் எமது அணிக்கு வாக்களித்தனர். எனவே, மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்காக நாம் அரசுக்குள் இருந்துகொண்டு போராடுவோம் என்றனர். (ம-3)

## மாநகர சபை...

முகப்படுத்தினார்கள்? சீருடைக்கு ஏன் இந்த நிறம் தெரிவு செய்யப்பட்டு இருந்தது? போன்ற பல கேள்விகள் தன்னிடம் விசாரணையின்போது கேட்கப்பட்டதாக யாழ்.மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் தெரிவித்தார்.

யாழ்.மாநகரில் தண்டப்பணம் அறவிடும் நடைமுறையை கையாள்வதற்காக அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர உத்தியோகத்தர்கள் ஐந்து பேருக்கும் சீருடையை வடிவமைத்துப் பெற்றுக் கொடுத்தமை தொடர்பில் நேற்றைய தினம் வாக்குமூலம் பெறுவதற்காக யாழ்.மாநகர சபை உறுப்பினர் பார்த்தீபன் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில் ஐந்து மணி நேரம் வரை விசாரணைகள் இடம்பெற்றது.

விசாரணைகள் முடிவுற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாநகர திண்மக்கழிவகற்றல் தொடர்பாக தண்டப்பணம் அறவிடும் அதிகாரங்கள் மாநகர சபைக்கு உள்ளதா? இது போக்குவரத்து பொலிஸாருக்கு உரியது தானே என்ற அடிப்படையிலும் கேள்விகள் எழுப்பப்பட்டன.

நல்லூரிற்கு அண்மையாக உள்ள வீதியில் கழிவொயில் ஊற்றப்பட்ட தகவலை யார் உங்களுக்கு வழங்கியது? ஊற்றப்பட்ட கழிவொயில் தொடர்பாக மாநகரசபை பணியாளர்களை அங்கு அனுப்ப உத்தரவிட்டது யார்? என்றும் போக்குவரத்தை கட்டுப்படுத்தும் அதிகாரம் மாநகர சபைக்கு இல்லை என்றும் அதனை செய்வதற்கு யார் அனுமதித்தார்கள்? போன்ற பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டன என்றார். (ம-3,33)

## ராஜ...

என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று அவரது அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஆசிரியர்களின் கல்வித்தரம், அதிபர்களின் தரம் என்பவற்றுக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படாமல் இன்று ஒரு போராட்டத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

ராஜபக்ஷ குடும்ப ஆட்சியின் காரணமாக இலங்கை குட்டிச்சுவராகி பொருளாதாரத்தில் தாழ்ந்து போயுள்ளது. இதுதான் இன்று விவசாயிகளுக்கும் நடந்துள்ளது என்றார். (ம-3)

## பஸ், ரயில்...

களுக்கு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மாணவர்களுக்கு பேருந்துகள் தேவையில்லை எனில், பாடசாலை அதிபர்கள், பேருந்துச்சாலை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார். (ம-3)

## 'ஒரே நாடு...

கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளது தலைவர்களுக்கும் அரச தலைவருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, இந்த விடயத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் செந்தில் தொண்டமான் ஆகியோர் பிரஸ்தாபித்திருந்தனர்.

இதன்படி அந்தச் செயலணியை மேலும் விஸ்தரித்து, தமிழ்ப் பிரதிநிதிகளை உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி இதன்போது உறுதியளித்துள்ளதாக செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 28/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1155
வெற்றி இலக்கங்கள்
கடகம் 2 3 9 7 3 8
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 28/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0917
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்கம் / வெற்றி இலக்கங்கள்
N 12 45 59 63 68

சம்பத லக்ன வரம
சீட்டிழுப்பு இலக்கம் 2021.10.28 திகதி 005
சம்பத சீட்டிழுப்பு
ஆங்கில எழுத்து Z வெலைபடுப்பட்ட இலக்கங்கள் 8 5 4 0 5 2
லக்ன வரம பரிசுக்கட்டமைப்பு
துலாம் 16 39 62

மஹஜன சம்பத
திகதி 2021/10/28
சீட்டிழுப்பு இலக்கம் 4569
ஆங்கில எழுத்து W வெல்லப்பட்ட இலக்கங்கள் 3 4 5 5 7 8
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 28.10.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2864
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 01 07 45 69
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.10.28
சீட்டிழுப்பு இலக்கம் - 599
A 06 27 29 61
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1372
சீட்டிழுப்பு திகதி: 28.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,360,792
வெற்றி இலக்கங்கள் 51 54 61 75 ஆங்கில எழுத்து N
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3707
சீட்டிழுப்பு திகதி: 28.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 37,165,925.10
வெற்றி இலக்கங்கள் 22 31 35 58 ஆங்கில எழுத்து L
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 3,370,158.00/=
திகதி: 28.10.2021
வெற்றி வாரம்: 3258
வர்ணம்:
வெற்றி இலக்கங்கள் 21 31 39 42 கன்னி
6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1546 நிறம்
சீட்டிழுப்பு திகதி 28.10.2021 தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் O 07 14 25 44
அடுத்த சுப்பர் ஜக்பொட் 67,730,787.60/=

සංවර්ධන වාසනාව அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 454 திகதி 28.10.2021 வர்ணம்
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 30 61 65 விதி எண் 9
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,310,888
6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

# இலங்கை கடற்பரப்பில் கைதான 23 இந்திய மீனவர்களும் 11ஆம் திகதி வரை மறியலில்

(கரணவாய்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 23 பேரையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கிருசாந்தன் உத்தரவிட்டார்.

கடந்த 14ஆம் திகதி வடமராட்சி கடற்பரப்பில் இரண்டு படகுகளில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 23 பேர் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று வியாழக்கிழமை(28) பருத்தித்துறை நீதிமன்றில் இடம்பெற்றிருந்தது. காணொளி மூலம் இடம்பெற்ற இவ் விசாரணையின் போது இந்திய மீனவர்கள் சார்பில் சட்டத்தரணிகளான திருமதி யோய் மகிழ் மகாதேவா, லோ. குகதாசன் ஆகியோர் ஆஜராயினர். குறித்த மீனவர்கள் 23 பேரையும் காரைநகர் கடற்படை முகாமில் தடுத்துவைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

(ம-03,60)

# வடக்கில் மேலும் 30 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் 17 பேர் உட்பட வட மாகாணத்தில் மேலும் 30 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலை ஆய்வு கூடத்தில் நேற்று 159 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாக மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ம-03)

# அதிபர், ஆசிரியர் போராட்டத்திற்கு ஏனைய தொழிற்சங்கங்களும் ஆதரவு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம்

(கொழும்பு)

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு ஏனைய தொழிற்சங்கங்களும் முழுமையான ஆதரவை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று காலை சமூக வலைத்தளங்களில் கருத்து வெளியிடும் போது இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் நாட்டிலுள்ள முதன்மை அரை அரச நிறுவனங்களின் தொழிற்சங்கங்களுடன் இணைந்து கூட்டு நடவடிக்கையை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக ஜயசிங்க மேலும் குறிப்பிட்டார்.

(ம-03)


## ஆகாஷ் நகைமாடம்
சந்தை வீதி, உடுப்பிட்டி

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, கொடிகாமம், சாவகச்சேரி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, கிளிநொச்சி.

வங்கியில் அடகு வைக்கப்பட்ட நகைகளைப் பார்த்து நகைக்கேற்ப பணத்தைத் தந்து வாங்கப்படும்.

தொடர்பு
076 825 7716
(8414)


# புதுக்குடியிருப்பில் 11 ஏக்கர் காணி இராணுவத்தால் விடுவிப்பு

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்னால் அமைந்துள்ள 11 ஏக்கர் காணிகள் நேற்று இராணுவத்திடம் இருந்து விடுவிக்கப்பட்டது. இது குறித்த ஆவணங்கள் மாவட்ட அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

இந் நிலையில் மக்கள் தமது காணிகளை சென்று பார்வையிட்டுள்ளனர். இவ்வாறு விடுவிக்கப்பட்ட காணிகளை அந்த காணியில் குடியிருந்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் சட்ட நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் ஈடுபட்டுள்ளதாகவும் அதுவரை இந்த காணிகள் கிராம சேவையாளரின் கண்காணிப்பில் இருக்கும் என்று பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தங்கள் வாழ்விடங்களை பார்வையிட்ட உரிமையாளர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்ததாவது,

காணிகளின் எல்லைகளை அடையாளப்படுத்த முடியுமே தவிர வேறு எந்த நடவடிக்கையும் நாங்கள் மேற்கொள்ள முடியாது. பலரது காணியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட கட்டடங்கள் காணப்படுகின்றன. சிலரது காணிகளில் ஒன்றும் இல்லை. சிலரது காணிகளில் தென்னை மரங்கள் நிற்கின்றன என்றும் காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளார்கள். நாங்கள் 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் இந்த காணிகளில் வீடமைத்து வாழ்ந்து வந்துள்ள நிலையில் எங்கள் சொத்துக்கள் அனைத்தும் போரின்போது அழிக்கப்பட்டு விட்டன. படையினரால் கட்டப்பட்ட கட்டடங்களே இதில் மிஞ்சியுள்ளன. தொலைத் தொடர்பு கோபுரம் ஒன்றும் உள்ளன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

(ம-03,281,316)


## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்...
திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

## இந்தியன் செலக்ஷனின்
தீபாவளி விசேட தள்ளுபடி

அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் சுகாதார வழி முறைகளுக்கு அமைவாகவும் இந்தியன் செலக்ஷனின் தீபாவளி மலிவு விற்பனை நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியோடு வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

பட்டுச்சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், டொப் வகைகள், சிறுவர், சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகள் மற்றும் ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைத் தெரிவுகள்.



இம்முறை தீபாவளியை இந்தியன் செலக்ஷனுடன் கொண்டாட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



(C-2900)

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.

இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்
காலம் : 22.10.2021 – 07.11.2021 வரை



## தேவை
நான்கு பேர் கொண்ட சிறிய குடும்பம் வசிப்பதற்கு இணுவில், தாவடி, மருதனார்மடம் ஆகிய இடங்களில் K.K.S வீதிக்கு அண்மையாக வீடு வாடகைக்கு இருந்தால் தொடர்பு கொள்ளவும்.
076 547 5278
(8417)



## விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975/=Kg
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

0768226240 DHL
(C-2831)



## வாகனம் வாடகைக்கு தேவை
யாழ். மாவட்டத்திற்குள் பொருட்களை விநியோகம் செய்வதற்கு 10 1/2 அடி நீளமான அலுமினிய பொடியினை உடைய கன்ரர் ரக வாகனம் மாதாந்த வாடகைக்கு தேவை.
தொடர்பு
076 986 5238
(8416)



## நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... இன்னும் 04 நாட்களே
அமெரிக்க அதிஸ்ட விசா



ஒரு தடவை மட்டும் பதிவுசெய்து கிடைக்காமல் அலுத்தக்கொண்டால் இந்தத்தடவை உங்களுக்குரிய வெற்றிவாய்ப்பை இன்னொருவருக்கு நீங்கள் விட்டுக்கொடுக்கிறீர்கள் என எடுத்துக்கொள்ளலாம்.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்
55000 இலவச விசாக்கள்
0768226244

கொட்டும் மழையிலும் குழந்தைகளுடனான சிரமத்தினையும் பாராது நானும் எனது மனைவியும் V2 TRAVELS இல் அமெரிக்கா லொத்தர் விசாவிற்கு பதிவு செய்தோம். கைமேல் பலனாக இன்று குடும்பத்துடன் அமெரிக்காவில் இருக்கிறோம். (C-2833)



கமலேந்திரன் - குடும்பம்
அமெரிக்கா விசா வெற்றியாளர்

திறமையாக பதிவுசெய்த V2 TRAVELS க்கு நன்றிகள்.

V2 Travels

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.